# கலைஞரின்
# குட்டிக் கதைகள்



# கலைஞரின்
# குட்டிக் கதைகள்

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

தொகுப்பு நூல்

**பாரதி பதிப்பகம்**

*26/108, உஸ்மான் சாலை,*
*தியாகராய நகர், சென்னை - 17.*
*த.பெ. எண். 4984, ☎ : 24340205.*

28489

க894.811303
ஜெ4

**விலை : ரூ. 12.00**

❑ KALAIGNARIN KUTTIK KATHAIGAL ❑ A Collection of Short Stories ❑ Revised Edition : Aug. 1998 ❑ Second Edition : March 2004 ❑ Price : Rs.12.00 ❑ Published by: BHAARATHE PATHIPPAHAM, 126/108, Usman Road, T.Nagar, Chennai 17. P.B. No. : 4984. ❑ ☎ : 24340205. ❑ Printed at: Sivakami Printo Graphics, 160, Big street, Triplicane, Chennai - 600 005. ❑ ☎ : 28445051 ❑

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

# கலைஞரின் குட்டிக் கதைகள்

## வள்ளுவர் சொன்ன பொய்

ஒரு வேடன் வேகமாக ஒரு மானைத் துரத்தி வருகிறான். அழகான புள்ளிமான் குட்டி. அது துள்ளி ஓட வேண்டிய தோட்டத்தில் ஓடவிடாமல் அதைக் கொன்றுவிட வேண்டும் என்கிற விருப்பத்தோடு வேடன் துரத்தி வர அது எங்கெல்லாமோ சுற்றி இறுதியாக வள்ளுவரின் இல்லத்திற்குள்ளே நுழைந்துவிட, வாயிற்புறத்திலே உட்கார்ந்து குறள் தீட்டிக் கொண்டிருக்கிற வள்ளுவர், தன்னைக் கடந்து, தன் வீட்டிற்குள்ளே மான்குட்டி சென்றதைக் காணுகிறார். பத்து நிமிடத்திற்குப் பிறகு வேடன் அங்கே ஓடி வருகிறான். வள்ளுவரைப் பார்த்துக் கேட்கிறான். "இந்தப் பக்கம் ஒரு மான்குட்டி வந்ததா?"

பொய் சொல்வதே தீது என்று கருதுகிற வள்ளுவர் என்ன சொல்லியிருக்க வேண்டும்? "ஆமாம். வந்தது. வீட்டிற்குள்ளேதான் இருக்கிறது" என்று சொல்லியிருக்க வேண்டும். சொல்லவில்லை. சொன்னால் வேடன், உள்ளே நுழைந்து அந்த மான் குட்டியை இழுத்துச் சென்று கொன்று தின்றிருப்பான். எனவே 'வரவில்லை' என்கிறார். வள்ளுவரா பொய் சொல்வார் என்று எண்ணிக் கொண்டு வேடனும் வேறு பக்கம் போய்விடுகிறான். "பெருந்தகையே! பொய்யே சொல்லாத தாங்கள் இப்படி ஒரு பொய் சொல்வதற்குக் காரணம் என்ன?"

அப்பொழுதுதான் வள்ளுவர் சொல்கிறார் : "நான் சொன்னது பொய்யா? உண்மையா? என்பதல்ல. வாய்மையா, அல்லவா என்பதை ஆராய்ந்து பார். பிறருக்குத் தீங்கு செய்யாத ஒன்றைச் சொன்னால் அதற்குப் பெயர் வாய்மை. எனவே நான் சொன்ன பொய்மையும் அந்த வாய்மையிடத்தில் வைக்கப்படும்"

## நீயும் கைதி - நானும் கைதி

பிறையே! வானக் கடலலையின் நுரையே! பலகணி வழியே சிறைக்குள் எட்டிப் பார்த்து என்ன சிரிக்கிறாய்?

'கைதியே! என்று என்னை நீ கூப்பிடுவது என் காதில் விழுகிறது. நீ மாத்திரம் என்ன? சுதந்திரத் தேரில் ஏறியா சுற்றி வருகிறாய்? கிழித்த கோட்டைத் தாண்டாமல், விழித்த கண்களை மூடாமல் சிறைச் சாலைக் காவலனைப் போல நடந்து போகத்தானே உனக்கு உரிமையிருக்கிறது!

சிறைக் கோட்டைக்கு வெளியே தவித்து நிற்கும் காதலியிடம் தாவிட முடியாது என்னால். உனக்கென்ன வாழ்கிறதாம்! உன் கோட்டுக்கு அப்பால் கண் சிமிட்டும் நட்சத்திர சீமாட்டிகளை கை நீட்டித் தொட முடியாது உன்னாலும்!

நானும் கைதி.

நீயும் கைதி.

## குருவி ராமேஸ்வரம்

ராமாயணத்திலே ஒரு கர்ண பரம்பரைக் கதை உண்டு. ராமர் சீதையைத் தேடி அலைந்து கொண்டிருந்த போது எங்கள் திருவாரூருக்குப் பக்கத்தில் வந்தாராம்.

அப்படி வந்தபோது அவரை வணங்கி ஒரு குருவி, "எனக்கு ஒரு வரம் வேண்டும்" என்று கேட்டதாம். "என்ன வரம்?" என்று ராமன்

கேட்டபோது "நான் ராமேஸ்வரம் செல்ல வேண்டும்" என்று அந்தக் குருவி வரம் கேட்டதாம்.

குருவியினுடைய சிறகுகள் மிகச் சிறியவை. "ராமேசுவரமோ தொலைவில் இருக்கின்ற ஊர். அவ்வளவு தூரம் உன்னால் பறந்து செல்ல முடியாது. எனவே குருவியே உனக்காக இங்கேயே ஒரு ராமேஸ்வரத்தை உண்டாக்குகிறேன்" என்று தன்னுடைய அம்பின் முனையால் அங்கேயே கோடுபோட்டு, ஒரு சிறிய குளத்தை உண்டாக்கி, "இதிலே குளித்தால் உனக்குப் புண்ணியம் கிடைக்கும்" என்றாராம்.

குருவியும் ராமனுடைய பேச்சைக் கேட்டு அவனுடைய அம்பால் வரையப்பட்ட அந்தக் குளத்தில் குளித்துப் புண்ணியம் பெற்றதாகக் கதை. இப்பொழுதும் அந்த ஊருக்கு குருவி ராமேஸ்வரம் என்று பெயர்.

".... ராமேஸ்வரம் போக முடியாத எனக்கு நீங்கள் இங்கேயே ஒரு ராமேஸ்வரத்தைக் காட்டி, உலகத் தமிழ் மாநாட்டிற்குச் செல்ல முடியாவிட்டாலும் – அங்கே நான் செல்வதற்கேற்ற தன்மான உணர்வுகள் அடைக்கப்பட்டது என்ற காரணத்தினால் – 'குருவிக்கு ராமேஸ்வரத்தை ராமன் உருவாக்கித் தந்ததைப் போல் உனக்கும் ஒரு உலகத் தமிழ் மாநாட்டை இங்கே உருவாக்கியிருக்கிறோம்' என்று உங்களுடைய பாசம் பொழிகின்ற இதயத்தின் சார்பாக இதை உலகத் தமிழ் மாநாடு என்று நீங்கள் சொன்னீர்கள்.

## பெண்களுக்கு ஏன் – மீசை தாடியில்லை?

அதற்கும் புராணத்தில் ஒரு கதை.

ஒரு ரிஷி இருந்தார் தேவலோகத்திலே. அந்த ரிஷிக்கு பூலோகத்தைச் சுற்றிப் பார்க்க வேண்டும் என்கிற ஆசை. தனியாகச் சென்றால் உல்லாசமாக இருக்காது என்று தன்னுடைய துணைவியையும் அழைத்தார்.

துணைவியார், "பருவம் அடைந்த மங்கை நமக்கு இருக்கிறாள். அவளை தேவலோகத்தில் தனியாக விட்டுவிட்டுப் போனால் என்ன ஆவது? எனவே நான் வரவில்லை" என்று சொன்னாள்.

"இல்லை, இல்லை. நீயும் வர வேண்டும். நாம் பருவம் அடைந்த பெண்ணை பத்திரமான இடத்தில் விட்டுவிட்டுப் போகலாம்" என்று சொன்னார்.

யாரிடத்திலே பருவப் பெண்ணை விட்டுவிட்டுப் போகலாம் என்று யோசித்தார்கள்.

சிவனிடத்திலே விட்டுச் செல்லலாமா? உடனே அவர்களுக்குள் ஆராய்ச்சி. அவர் பக்கத்திலே பார்வதியும், தலையிலே கங்கையும் வைத்திருப்பவர் ஆயிற்றே! இந்த இருவரும் போதாமல் தாருகா வனத்து ரிஷி பத்தினிகளையெல்லாம் கற்பழித்ததாகக் கதை இருக்கிறதே. அவரை நம்பி நம்முடைய பருவச் சிட்டை எப்படி விட்டுச் செல்வது?

இந்தக் கேள்வி எழுந்த காரணத்தால் சிவனைக் கை கழுவினார்கள்.

விஷ்ணுவிடம் விட்டுச் செல்லலாமா? என்று எண்ணினார்கள்.

அவன் பாமா – ருக்மிணி போதாமல் ஆயிரக் கணக்கான கோபிகா ஸ்திரீகளோடும் விளையாடி, அடுத்த வீட்டுக்காரன் மனைவியான ராதையிடமும் விளையாடியவன் ஆயிற்றே! எனவே அவனிடத்தில் எப்படி விட்டுச் செல்வது? என்ற ஐயப்பாடு ஏற்பட்டது. அவரையும் கை கழுவினார்கள்.

சரி இந்திரனிடம் விட்டுச் செல்லலாமா? என்றவுடன் "சரிதான் போங்கள்! அவரிடத்திலா? அவர் ரிஷிபத்தினி அகலிகையையே கற்பழித்து அவருடைய உடலெல்லாம் ஆயிரம் கண்கள் – புண்கள் என்கின்ற அளவுக்கு கடும் கோபத்திற்கு ஆளானவர் ஆயிற்றே! அவரிடமா?" என்று பத்தினி கேட்டாள்.

கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தார்கள். எமனிடத்திலே விட்டுச் செல்லலாம் என்று. அவன்தான் தர்மராஜன், நல்லவன். அவனிடத் திலே விட்டுச் செல்லலாம் என்ற முடிவுக்கு வந்து எமனிடத்திலே அந்தப் பெண்ணை ஒப்படைத்து விட்டு ரிஷியும் ரிஷிபத்தினியும் பூலோகத்திற்குப் புறப்பட்டார்கள்.

எமன் ஒரு தரம் தன்னுடைய அரண்மனையிலிருக்கும் அந்தப் பெண்ணைப் பார்த்தான். தர்மராஜன் அல்லவா? அவனுக்கே சபலம் தட்டியது.

எனவே, அந்தப் பெண்ணிடம் தன்னுடைய ஆசையை வெளியிட் டான் எமன். அவளும் ஆசையை வெளியிடுபவன் எமன் ஆயிற்றே என்ற காரணத்தால் சம்மதித்தாள்!

இருவருக்குமிடையே நட்பு உதயமாயிற்று. இந்த நட்புக்கிடையே எமனுக்கு ஒரு சந்தேகம். நாம் செய்கிற காரியம் யாருக்காவது தெரிந்துவிட்டால் என்ன ஆவது என்பதற்காக எமன், பகல் நேரத்திலே எல்லாம் அந்தப் பெண்ணைத் தன்னுடைய வயிற்றிலே போட்டு விழுங்கிவிடுவது; இரவு நேரத்திலே மாத்திரம் தன்னுடைய பள்ளி யறைக்குச் சென்று வெளியே துப்புவது. பிறகு இருவரும் பள்ளி யறையிலே இன்பமாக இருப்பது. இது நாளொரு மேனியும் பொழு தொரு வண்ணமுமாக நடைபெற்று வருகின்ற எமலோகத்துக் காதல் காட்சி.

ஒருநாள் குளிப்பதற்காக நீரோடைக்குச் செல்கிறான் எமன். குளிக்கும் நேரத்திலே வயிற்றுக்குள்ளே மப்பு மந்தாரம் இருக்கக் கூடாதல்லவா? எனவே பக்கத்திலே பளிங்கு மண்டபத்திலே அந்தப் பெண்ணைத் துப்பி உட்கார வைத்துவிட்டு "இங்கேயே இரு. குளித்து விட்டு வருகிறேன்" என்று சொல்லி விட்டுப் போய்க் குளிக்கிறான்.

அதே நேரத்தில் அந்தப் பக்கமாக அக்கினி பகவான் வருகிறான். வந்தவன் பளிங்கு மண்டபத்திலே இருக்கிற பாவையைப் பார்த்து

விடுகிறான். உடனடியாக அவனுக்கு காதல் ஏற்படுகிறது. அவளும் சம்மதித்து விடுகிறாள்.

இருவரும் அந்தப் பளிங்கு மண்டபத்திலே இன்பமாக இருக்கிற நேரத்திலே எமன் குளித்துவிட்டு அந்த வழியாக வருகிறான். அவன் பார்த்துவிட்டால் ஆபத்து ஆயிற்றே என்று பயந்த அந்தப் பருவ மங்கை, எமனை ஏமாற்றுவதற்காக அக்கினி பகவானைத் தூக்கித் தன்னுடைய வயிற்றிலே போட்டு விழுங்கிவிடுகிறாள்.

எமன், இவைகள் எதுவும் தெரியாதவன் – பாவம். அவளை வழக்கம் போல் தன்னுடைய வயிற்றிலே தூக்கிப் போட்டு விழுங்கி விடுகிறான்.

அக்கினி பகவானைத் தேடிக் கொண்டு வந்த வாயு பகவான் எங்கே நண்பனைக் காணவில்லையென்று உலகமெல்லாம் தேடத் தொடங்கிவிட்டான்.

இப்போது ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

எமன் வயிற்றிலே அந்தப் பருவப் பெண்! பருவப் பெண்ணின் வயிற்றிலே அக்கினி பகவான்!

பகல் நேரம் வந்ததும் சும்மா இருக்கக் கூடாதே என்று அந்தப் பருவப்பெண் எமன் வயிற்றுக்குள்ளேயே தன் வயிற்றிலிருக்கிற அக்கினி பகவானை உமிழ்ந்து, எமனுடைய வயிற்றையே பள்ளி யறையாகப் பகல் நேரமெல்லாம் ஆக்கிக் கொண்டாள்!

பிறகு இரவு நேரத்தில் வழக்கம்போல் எமன் அவளை உமிழ் வதும், அவளோடு இருப்பதும் வாடிக்கையாக இருந்தது.

இதற்கிடையே வாயு பகவான், உலகமெல்லாம் தேடுகிறான். அக்கினியைக் காணவில்லை. அக்கினி இல்லாவிட்டால் உலகம் இயங்குமா? சிகரெட் பிடிக்க நெருப்பு எழுமா? அடுப்பெரிக்க விறகுக் கட்டையில் தீ வருமா?

எனவே, அக்கினியைக் காணாமல் உலகமெல்லாம் அலறுகிறது.

அந்த நேரத்திலே உலகைச் சுற்றிப் பார்க்கச் சென்ற ரிஷியும், ரிஷிபத்தினியும் தேவலோகம் திரும்புகிறார்கள். பெண்ணைக் காண வில்லை. ஒன்றும் புரியவில்லை. முறையிடுகிறார்கள்.

அந்த நேரத்தில் வாயு பகவான், இந்த விஷயங்களையெல்லாம் இரகசியமாகத் தெரிந்து வைத்துக் கொண்டு, இதை வெளிப்படுத்த வேண்டும் என்று தேவர்களுக்கு விருந்து வைத்து சிறப்பு விருந்தினர் களாக சிவன், விஷ்ணு, பிரம்மா, எமன் அனைவரையும் அழைக் கிறான், தேவர்கள் உட்பட.

அனைவரும் வருகிறார்கள். பெற்றோர்களும் வந்திருக்கிறார்கள்.

எமனிடத்திலே மாத்திரம் மூன்று இலைகள் போடச் சொல்கிறான் வாயு பகவான்.

சிவன், "என்ன அவனுக்கு மாத்திரம் மூன்று இலைகள்? எங்களை யெல்லாம் அவமதிக்கிறாயா?" என்று கேட்கிறார்.

"இல்லை, இல்லை, கொஞ்சம் பொறுங்கள்" என்று சொல்லிவிட்டு எமனைப் பார்த்து, "எமனே! உன்னுடைய வயிற்றிலே இருக்கின்ற அந்தப் பெண்ணை வெளியே உமிழ்வாயாக!" என்றதும் எமன் எதுவும் சொல்ல முடியாமல் அந்தப் பெண்ணை வெளியே உமிழ் கிறான்.

அந்தப் பெண் வெளியே வந்து இன்னொரு இலையிலே உட் காருகிறாள்.

இரண்டு இலை – இரட்டை இலை ஆயிற்று.

"சரி மூன்றாவது இலை எதற்காக?" என்று எமன் ஆத்திரத்தோடு கேட்கும்போது, வாயு பகவான், அந்தப் பெண்ணைப் பார்த்து "பத்தினித் தங்கமே! உன் வயிற்றுக்குள் இருக்கின்ற என் ஆருயிர்

நண்பன் அக்கினி பகவானை தயவு செய்து வெளியே அனுப்பு" என்று சொல்லுகிறான்!

உடனே அவள் நடுங்கி வயிற்றுக்குள் இருந்த அக்கினி பகவானை வெளியே உமிழ, அக்கினி பகவான் வெளியே வருகிறான். அவன் வெளியே வருகிறபோது அந்த நடுக்கத்தில் அந்தப் பெண்ணுடைய முகத்திலே இருக்கின்ற தாடி, மீசையெல்லாம் பொசுங்கிவிடுகிறது.

அதுவரையிலே உலகத்திலே இருந்த பெண்களுக்கு ஆண்களைப் போல் முகத்திலே தாடி, மீசை இருந்தது – கதைப்படி.

அக்கினி பகவான் வெளியே வந்த நடுக்கத்திலே தாடி மீசை யெல்லாம் பொசுங்குகிறதல்லவா? அது முதல் உலகத்திலே பிறந்த எல்லாப் பெண்களும் தாடி, மீசை இல்லாமலே பிறக்கிறார்கள்.

## கடலைத் தூர்ப்பது மிக எளிது

ஒருநாள் கடற்கரையோரம் சென்று கொண்டிருந்தேன். ஒரு புதுமையான உருவம் கடலை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. வியப்பு மேலிட்டது எனக்கு! ஓர் ஆணைப் போலவோ அல்லது பெண்ணைப் போலவோ அந்த உருவம் இல்லை. பறவை இனம் போலவும் தெரியவில்லை. விலங்கினமாகவும் தோன்றவில்லை. எப்படியும் இந்தப் புதிருக்கு விடை கண்டாக வேண்டுமென்று அவா உந்தித் தள்ள அந்த உருவத்தை நோக்கி வேகமாக நடந்தேன். அருகில் செல்லச் செல்ல அந்த உருவத்தின் முழுத் தோற்றப் பொலிவையும் என்னால் காண முடிந்தது.

ஆலிலை போன்ற வடிவத்தில் உடல், தலையென்று தனியாக இல்லை. ஆலிலை வடிவத்திலேயே கண், காது, மூக்கு, வாய் என்று முகத்துக்குரிய உறுப்புகள் இருந்தன. கொடி போன்ற இரண்டு கால்கள், கொடி போலவே இரண்டு கைகள்.

திகைத்து நின்றேன். அந்த உருவம் என்னைப் பார்த்தது. ஆனால் நிற்கவில்லை. என்னதான் செய்கிறது பார்ப்போம் என அமைதியாக

அங்கேயே நின்று கொண்டிருந்தேன். அந்த உருவம் திடீரென்று தனது கைகளை விரித்துக் கடற்கரை மணலை அள்ளியது. அள்ளிய மணலைக் கடலில் கொண்டுபோய்ப் போட்டது. மீண்டும் மீண்டும் அதே காரியத்தைச் செய்து கொண்டிருந்தது. மணலை அள்ளி விளையாடுகிறது போலும் என்று முதலில் எண்ணிய எனக்கு அந்த உருவத்தின் செயல் பெரும் பிரச்சினையாகவே ஆகிவிட்டது. மணலை அள்ளுகிறது. கடலில் வீசுகிறது. சற்றுக் களைப்புற்று நிற்கிறது. மறுபடியும் மணலை அள்ளுகிறது, கடலில் தூவுகிறது.

துணிவை வரவழைத்துக் கொண்டு இன்னும் கொஞ்சம் நெருக்கமாகச் சென்றேன். உருவம் என்னை ஏற இறங்கப் பார்த்துவிட்டு மணலை அள்ளுவதற்குக் குனிந்தது.

“நீ யார்?”

இது என் கேள்வி.

“என்னைத் தெரியவில்லை? நான்தான் இதயம்!” என்றது அந்த உருவம்.

“ஓகோ! இதயமா? உனக்குக் கால் கை முளைத்து கண்ணும் மூக்கும் வந்துவிட்டதா? சரி! சரி, நீ யாருடைய இதயம்? ஆண் பாலா? பெண் பாலா?”

“என் கொடி நிகர் கால் கைகளைப் பார்த்தாலே நான் பெண் இதயம் என்று புரியவில்லையா?”

எனக்கு எல்லாமே புரிந்துவிட்டது. ஒரு பெண்ணின் நெஞ்சம் ஏதோ வேதனை காரணமாக இப்படி வெளியே வந்திருக்கிறது என்பதைத் தெளிவாக உணர்ந்து கொண்டேன். தொடர்ந்து கேள்வி கேட்டேன்.

“ஏ பெண் நெஞ்சே! எதற்காக நீ மட்டும் தனியாக வந்திருக்கிறாய்?”

"இது என் தலைவியின் கட்டளை!"

"தலைவி உன்னைத் தனியாக அனுப்பினாளோ? அனுப்பியது சரி! இந்த மணலையெடுத்துக் கடலில் போடச் சொன்னதும் உன் தலைவி யின் கட்டளை தானோ?"

"ஆமாம்!"

"ஏன் இந்த வீண் வேலை, உனக்கும் உன் தலைவிக்கும்?"

"என் தலைவி என்னைக் கூப்பிட்டாள். 'அடியே என் நெஞ்சமே! நீ உன்மீது அன்பு இல்லாதவரிடம் உன் மிகுந்த துன்பத்தையும், பிரிவின் வேதனையையும் சொல்லிப் பயன் கிடையாது. அதைவிட எளிதான வேலை மணலை அள்ளிப் போட்டு ஆழ்கடலைத் தூர்ப்பதாகும்! எனவே அந்த வேலையைச் செய்' என்றாள். அதைத்தான் இப்போது செய்கிறேன்"

இந்த பதிலைக் கேட்டதும் என் தலை சுற்றியது. அடடா! அந்தத் தலைவியின் துயரம் எத்தகையது! காதலனிடம், தன் வேதனையைச் சொல்லி அவனைத் தன்பால் அன்பு கொள்ளச் செய்வதைக் காட்டிலும் கடலைத் தூர்ப்பது எளிதாம்.

விழித்துக் கொண்டேன்
கனவு என்பது புரிந்தது.

## மனைவி சொன்ன விளக்கம்

இன்று மாலை 3 மணிக்கு நான் வானொலி நாடகம் ஒன்றைக் கேட்டேன். அந்த நாடகத்தில் சந்தனா என்னும் ஒரு பெண் – சந்தை ஒன்றில் விலை கூறி விற்கப்படுகிறாள். மிக அழகான பெண் அற்புதமான பேரழகி... ஒரு பெரிய செல்வச் சீமான், அந்தப் பெண்ணை விலைக்கு வாங்கித் தன்னுடைய ஊருக்கு அழைத்துச் செல்கிறான். ஊருக்குச் சென்றதும், நந்தவனத்தில் இருக்கின்ற

மனைவியை அழைத்து, "என்னுடைய ஆருயிர் மனைவியே!" ஓர் அழகான அடிமையை விலைக்கு வாங்கி வந்திருக்கிறேன்" என்று சொல்கிறான். தனக்கு ஒரு வேலைக்காரி கிடைத்த மகிழ்ச்சியில் 'அவளுடைய முகத்திரையை நீக்குங்கள் பார்க்கலாம்' என்றாள் மனைவி.

இதன்படி முகத்திரை நீக்கப்பட்டதும் அவள் பேரழகியாக இருப்பதைப் பார்க்கிறாள். அந்தச் சீமான் தன் மனைவியிடம், "இவளைப் பார்த்துக் கொள்; நான் சற்று வியாபார வேலைகளைப் பார்த்துவிட்டு வருகிறேன்" என்று கூறிவிட்டு வெளியூர் போகிறான். அவன் போனதும், அவன் மனைவி நினைக்கிறாள் – 'இவர் இந்த அழகியை வேலைக்காக வாங்கி வரவில்லை, தன்னுடைய இச்சையைத் தீர்த்துக் கொள்ளத்தான் அழைத்து வந்திருக்கிறார். ஆகவே, அவர் வருவதற்குள்ளாக இந்த அழகியை விகாரமாக ஆக்கிவிட வேண்டும்' என்று எண்ணி முடி திருத்துபவனை அழைத்து வரச் சொல்லி – அவளுடைய கூந்தலை கோணல் மாணலாக வெட்டச் சொல்கிறாள். முகத்தில் சூட்டுக் கோலால் கோடுகளைக் கிழித்துக் கோர ரூபமாக அவளை ஆக்குகிறாள்!

அதற்குக் காரணமாக அவள், 'என் கணவன் அவளைக் காதலித்து விடுவார். ஆகவேதான் இதைச் செய்கிறேன்' என்று சொல்கிறாள்!

## நாதம் எழாது - நரம்புதான் அறும்

புத்தர் ஒரு வாலிபனைச் சந்தித்தார். அந்த வாலிபனிடத்தில் புத்தர் சொன்னார் :– "ஓ வாலிபனே! வீணையினுடைய நரம்பை மேலும் அதிகமாக முடுக்கினாலும் அல்லது அதிகம் தளர்த்திவிட்டாலும் நல்ல இசையைக் கேட்க முடியாது."

"வீணை நரம்பில் இனிய நாதம் – இன்ப நாதம் – எழிலிசை கிளம்ப வேண்டுமானால் நரம்பு எந்த அளவுக்கு முடுக்கப்பட வேண்டுமோ அந்த அளவுக்கு முடுக்கப்பட வேண்டும். 'நான்

இப்படித்தான் முடுக்குவேன்' என்று முடுக்கினால் நாதம் எழுவதற்குப் பதிலாக நரம்பே அறுந்துவிடும்.

## அவள் சொன்னாள்

ஒரு பெண்ணைப் பார்த்து, 'ஆலமரத்தடிப் பிள்ளையாரை ஆறு முறை சுற்றி வந்தால் உனக்குக் கர்ப்பம் தரிக்கும்' என்று ஒருவன் சொன்னான்.

அந்தப் பெண், 'இப்போதே எனக்கு ஆறு மாத கர்ப்பம்' என்று சொன்னாள்.

## இருவரும் சூடியிருப்பது ஆத்தி மாலைதான்

கோவூர் கிழார் என்ற சங்ககாலப் புலவர் நலங்கிள்ளி, நெடுங் கிள்ளி என்ற இரண்டு சோழர்களுக்கும் நண்பர். ஒரு நாள் நெடுங் கிள்ளியின் பால், நலங்கிள்ளியின் அவைக்களப் புலவர் இளந்தத்தன் என்பான் வருகிறான்.

நெடுங்கிள்ளி, 'இவன் புலவன் அல்லன். நலங்கிள்ளியால் அனுப்பி வைக்கப்பட்ட ஒற்றன்' என்று சந்தேகப்படுகிறான்.

உடனே கோவூர்கிழார் தலையிட்டு, "அல்ல அல்ல நெடுங்கிள்ளி! அவசரப்படாதே, இவன் புலவன்தான்! நலங்கிள்ளியின் கொலு மண்டபத்தில் பணியாற்றுகின்ற புலவன்தான் இந்த இளந்தத்தன்" என்று சொல்லி அவனைக் காப்பாற்றுகிறார்.

அடுத்த கட்டம் – உறையூரில் இருந்த சோழன் நெடுங்கிள்ளிமீது, சோழன் நலங்கிள்ளி போர் தொடுக்கின்றான். அந்தப் போரில் கோவூர்கிழார் பங்கு என்ன தெரியுமா?

கிருஷ்ணனைப் போல் – பாண்டவருக்காகத் தூது சென்ற கிருஷ் ணன் போல் – அதைக் கொடு, இதைக் கொடு என்று கேட்கவில்லை.

இரண்டு மன்னர்களுக்கிடையே நின்று பாடுகிறார். என்ன பாடுகிறார்?

**"நின்ன கண்ணியும் மார்மிடைந்தன்றே**
**நின்னொடு பொருவோன் கண்ணியும் மார்மிடைந்தன்றே"**

அதாவது, "சோழனே, நெடுங்கிள்ளியே, நீ அணிந்திருப்பதும் ஆத்திதான்; நலங்கிள்ளியும் ஆத்திதான் சூடியிருக்கிறான்; இரு வருமே சோழ வம்சத்தைச் சேர்ந்தவர்கள்."

**"ஒருவீர் தோற்பினும் தோற்ப துங்குடியே"**

இரண்டு பேரில் யார் தோற்றாலும் சோழர் குடிதான் தோற்றது என்று சரித்திரத்தில் வரும்.

**"இருவீர் வேறல் இயற்கையு மன்றே"**

இருவரும் வெற்றி பெறுவது என்பது இயற்கையல்ல. அதனால்,

**"குடி பொருளன்று நுஞ்செய்தி"**

ஆகவே உங்களுடைய செயல் குடிப் பெருமைக்கு ஏற்றதல்ல– என்று பாடுகிறார்.

## கொல்லப்பட வேண்டியது புலி, ஆனால்...

...கொல்லி மலையை ஒரு காலத்தில் பரிபாலித்தவன் வல்வில் ஓரி என்பான் ஆவான். கடை ஏழு வள்ளல்களில் அவனும் ஒருவன். அந்த ஒருவனுடைய பரிசினை வேண்டி வன்பரணர் என்ற புலவர் வருகிறார். வருகின்ற நேரத்தில் அந்த ஓரியைப் பற்றி ஒரு பாடல் இயற்றிக் கொண்டு வருகிறார். அந்தப் பாடலின் பொருள் என்ன தெரியுமா?

"வல்வில் ஓரி மன்னா! உன்னுடைய கையிலே இருக்கின்ற அம்பு, யானையை வீழ்த்தத்தக்க அம்பு. அத்தகைய அம்பால் நீ ஒரு புலியை

எய்தாய். அந்த அம்பு புலியின் மீதுபட்டு, அதனுடைய உயிரைக் குடித்து – பிறகு புலியை விட்டுக் கிளம்பி அங்கே ஓடிக் கொண்டிருந்த மான் மீது பட்டு, அதன் உடலை ஊடுருவி அங்கே திரிந்து கொண் டிருந்த பன்றியின் உடலில் பட்டு, அந்தப் பன்றியையும் கொன்று விட்டு, கடைசியாக அந்த அம்பு ஒரு புற்றிலே படுத்திருந்த உடும்பின் உடலிலே தைத்தது" என்று அந்த அம்பின் பெருமையைச் சொல் கிறார்.

கொல்லப்பட வேண்டியது புலி. ஆனால் அத்துடன் மானும் கொல் லப்பட்டது என்கின்ற போதுதான், நமக்கு வருத்தம் ஏற்படுகிறது.

## அந்தக் காலத்திலே!

அந்தக் காலத்திலே பாராளப் பிறந்த ராமனின் பாதுகைகளை, தம்பி பரதன் தலையிலே சுமந்து, அவற்றை அரசுக் கட்டிலிலே அமர்த்தி அதன் பிரதிநிதியாகத் தானிருந்து அரசோச்சினானே – அவனல்லவா உண்மையான தம்பி...

...அண்ணன் பாதுகைகளைச் சுமந்து சகோதர வாஞ்சையின் எடுத்துக்காட்டாக நின்ற பரதன் வாழ்ந்த, அதே அந்தக் காலத் திலேதான், அவன் அண்ணன் அயோத்தியானுக்கு, தன் அண்ணன் இராவணனைக் காட்டிக் கொடுத்த சகோதரன் விபீஷணனும் இருந்திருக்கிறான்...

இந்தக் கால மாணவர்கள், ஆசிரியர் நாற்காலியில் முள் வைக்கிறார்கள். அந்தக் காலத்திலே, துரோணாச்சாரியார் என்ற குருவுக்குக் கட்டை விரலைத் துண்டித்து காணிக்கையாகக் கொடுத்த ஏகலைவன் இருந்திருக்கிறானே...

....ஆச்சாரியார் துரோணருக்குக் கட்டை விரலைத் தந்த சிஷ்ய சிரேஷ்டன் ஏகலைவன் வாழ்ந்த அந்தக் காலத்திலே தான் – குரு பத்தினி தாரையைக் கூடிய சந்திரனும் இருந்திருக்கிறான்...

## ஆண்டவன் தரிசனம் கொடுத்த ஊர்

"...அம்பல் திருமாரித்திலேதானே... சுந்தரமூர்த்தி நாயனார் பெரிய யாகம் செய்தார்? அந்த யாகத்திலே வேதங்களைக் கற்ற பிராமணர் கள் புரோகிதர்களாக இருந்து மந்திரம் ஜபித்தனர். அப்போது திருவாரூரில் இருந்து தியாகராஜப் பெருமான், தானும் தன் தேவியு மாக 'புலையர்கள்' வேடத்தில் கள்ளுக்குடம் தூக்கிக் கொண்டு செத்துப்போன கன்றுக் குட்டியையும் தோளில் போட்டுக் கொண்டு அந்த யாகத்துக்கு வந்தார்'' என்று ஸ்தல புராணம் கூறுகிறது. ஆண்டவனே தாழ்த்தப்பட்ட ஜாதிக்காரராக வந்து தரிசனம் கொடுத்த ஊரல்லவா இது!

## வீரவாடி

மன்னர்கள் காலத்தில் 'நோக்கர்' என்னும் குலத்தினருக்கு இனாமாக வழங்கப்பட்ட கிராமத்திற்குப் பெயர் தான் வீரவாடி. அந்தச் சிற்றூருக்கு அந்தப் பெயரைச் சூட்டியவரே பழைய காலத்து மன்னர் ஒருவர்தானாம்.

நோக்கர் குலத்தைச் சேர்ந்தவர்கள் முதுகில் முறங்களைக் கட்டிக் கொண்டு பறக்கும் கலையைக் கற்று அதனை மிகத் திறமையாக வெளிக்காட்டி வந்தார்களாம். அவர்கள் ஒருநாள் மன்னரை அணுகித் தங்கள் திறனைக் காட்ட வாய்ப்பு வழங்குமாறு கோரி னார்களாம். அதை நம்ப முடியாத மன்னர் அவர்களைப் பார்த்து ''நீங்கள் முறத்தைக் கட்டிக் கொண்டு பறந்து சென்று எந்த ஊரில் இறங்குகிறீர்களோ, அந்த ஊரையே உங்கள் இனத்தவர்க்கு இனாமாக அளிக்கத் தயார்'' என்றாராம்.

அந்த அறைகூவலை ஏற்றுக் கொண்டு நோக்கர் குலத்தினர் முறங்களைக் கட்டிக் கொண்டு பறந்து வந்து ஓர் ஊரில் இறங்கி னார்களாம். மகிழ்ச்சியடைந்த மன்னர் அந்த ஊரையே அவர்கட்கு

மானியமாக வழங்கி, அந்த ஊருக்கும் 'வீரவாடி' என்ற பெயரைச் சூட்டினராம்.

## சொர்க்கத்திற்கு வந்தது எப்படி?

சொர்க்கலோகத்தில்... சோலை, விருந்து!

இவை எதையுமே கவனிக்காமல் புல் தரையில் ஒரு கூட்டம் அமர்ந்திருந்தது. அந்தக் கூட்டத்தினரின் தோள்பட்டையில் ஒரு மஞ்சள் நிறத் துண்டுத் துணி தொங்கிற்று. அ:தில் நீல வர்ணத்தில் "குடியேறியவர்" என்று குறிக்கப்பட்டிருந்தது. முகங்களைப் பார்க்கும்போது பூலோகவாசிகளே என்பது நன்றாகத் தெரிந்தது. ஆமாம்... பூலோகவாசிகள்தான்! கண்ணப்ப நாயனார், காரைக்கால் அம்மையார், நந்தனார், சிறுத்தொண்டர்... இன்னும் எல்லோரும் இருந்தனர். அவர்கள் பேச்சு பெரிய விவாதமாக அமையவில்லை. ஆளுக்கு ஒரு வார்த்தை பேசினார்கள். அது அவர்கள் சொர்க்க லோகத்துக்கு வந்த விதத்தைப் பற்றி!

"என்னுடைய இரண்டு கண்களையும் குத்திக் கொண்ட பிறகுதான் கடவுள் கருணை கிடைத்தது"

**– கண்ணப்ப நாயனார்**

"என் குழந்தையைத் துண்டு போட்டுக் கறி சமைத்து, அதன் தலையை நானும் என் மனைவியுமே இடித்து துவையல் அரைத்து அன்னமிட்டேன். அதற்குப் பிறகுதான் சிவபெருமான் சித்தமிரங்கி என்னை ஆட்கொண்டார்"

**– சிறுத்தொண்டர்**

"அக்கினியிலே முழுகி தீட்டையெல்லாம் பொசுக்கி கொன்று விட்டு பொன்மேனியோடு வா" என்று தீக்ஷிதர் கனவிலே தீன தயாபரன் சொல்லிவிட்டார். அந்தத் தியாகத்தை நான் செய்த பிறகு தான் தில்லையப்பனின் திருப்பாத தரிசனம் கிடைத்தது."

**– நந்தனார்**

"உடலில் உள்ள சதைகளையெல்லாம் கிழித்தெறிந்து விட்டு, ரத்தத்தை வடித்துவிட்டு, எலும்பு உருவமாக – பேய் மாதிரி தலை கீழாக நடந்து வரச் சொன்னார் பீடுடைய பெருமான்! அந்தக் கஷ்டத்திற்கு ஆளான பிறகுதான் கைலாசபதி கடாக்ஷம் பாலித்தார்"

**– காரைக்கால் அம்மையார்**

"ஆலயங்களில் புல் செதுக்கினேன்; அந்தணராம் திருஞான சம்பந்தரின் பல்லக்குத் தூக்கினேன். அதையெல்லாம் செய்த பிறகுதான் அமரர் உலகம் வர அனுமதி கிடைத்தது, எனக்கு!"

**– அப்பர்**

"மனிதனுக்கு மானம் பெரிது; அந்த மானத்தை அடகு வைத்து, என் மனைவியை பரமசிவனோடு பள்ளியறைக்கு அனுப்பி வைத்தேன். அந்தத் தியாகத்தின் பரிசாகத்தான் இந்தப் பரமண்டல வாசத்தைப் பரமன் எனக்கு அளித்தார்"

**– இயற்பகை நாயனார்**

"என் முழங்கையைச் சந்தனக் கட்டைக்குப் பதிலாக தேய்த்து பகவத் பூசை பண்ணினேன். அதன் பலன்தான் எனக்குச் சொர்க்க லோகம்"

**– மூர்த்தி நாயனார்**

"அப்பப்பா! இந்த லோகத்திற்கு வர எத்தனை பேரைக் கொலை செய்திருக்கிறேன் தெரியுமா? சிவனைத் தூஷித்தவர்களையெல் லாம் மழுவால் வதைத்துக் கொன்று போட்டேன். அந்தப் பிணங் களையெல்லாம் பிறை சூடும் பித்தரிடம் காட்டிய பிறகுதான் இந்தப் பேறு கிட்டியது!"

**– எறிபத்த நாயனார்**

"சிவனுக்காகச் சேமித்து வைத்திருந்த நெல்லைப் பஞ்ச காலத்தில் சாப்பிட்டார்கள் என்பதற்காக... பக்தியின் காரணமாக என் தாய், தந்தை, என் ஆசை மனைவி மற்றும்... நெல்லைத் தின்ற தாயின்

பாலைக் குடித்திருக்கும் என்பதற்காக... என் அன்புக் குழந்தை ஆகியோரைக் கொடுவாளால் வீசிக் கொலை புரிந்தேன். அதன் பிறகு தான் என் குற்றத்தை மன்னித்து கொன்றையணி செஞ்சடையார் காட்சியளித்தார்"

**– கோட்புலி நாயனார்**

இப்படிப் பக்தர்கள் தங்கள் தியாகங்களைக் கூறிப்பெருமிதங் கொண்டனர். பெருமூச்சு விட்டனர்.

அப்போது ஒரு திடீர்க் குரல் கேட்டு பேச வாயெடுத்த கண்ணப்பர் நிறுத்திவிட்டார். எல்லோரும் திரும்பிப் பார்த்தனர். ஒரு வாலிபம் மறைந்த மங்கையின் தோளில் கைபோட்டபடி, ஒரு பூணூல்கார அய்யர் நின்றார். எல்லா பக்த சிரோன்மணிகளும் அவர் வாயைப் பார்த்தபடி இருந்தனர். அந்த அய்யர் பேசினார்:

"நீங்கள் எல்லாம் மோட்ச லோகம் வர பெரிய பெரிய தியாகம் செய்ததாகப் பெருமையடித்துக் கொள்கிறீர்களே, அதை நினைத்தால் எனக்குச் சிரிப்பு வருகிறது.

"சொர்க்கலோகம் வர, சொல்ல முடியாத தொல்லைகள் அனுபவித்ததாகச் சொல்கிறீர்களே. இதோ பாருங்கள், நான் எந்தவிதமான சிரமமும் இன்றி சிவலோகம் வந்திருக்கிறேன்.

(பக்தர்கள் ஆச்சரியத்தால் திகைத்து விட்டார்கள்)

"ஆச்சரியப்படாதீர்கள் அன்பர்களே! இதோ என் மேல் சாய்ந்து கொண்டிருப்பது என் தாய்.

(கோட்புலி நாயனார் குறுக்கிட்டு) "உமது தாயாரா?"

"ஆமாம் என் தாய்! என்னைப் பத்து மாதம் சுமந்து பெற்ற தாய். அழகுத் தொட்டிலில் இட்டு ஆராரோ பாடிய தாய். இந்தத் தாயாரை நான் என் தாரமாகக் கொண்டிருக்கிறேன். இங்கு மட்டுமல்ல; பூலோகத்திலேயே இந்த அன்னை என் ஆசை நாயகியாக இருந்தாள்.

இவள் என்னைத் தொட்டிலில் போட்டு ஆட்டினாள். நான் இவளுக்குக் கட்டிலில் இன்பமூட்டினேன். மாதாவை மனைவியாக்குவது மகா பாபமல்லவா என்பீர்கள். இதைவிட மகா பாபமாக எங்களை மஞ்சத்தில் கண்டுவிட்ட என் தகப்பனாரை உடனே கொன்று போட்டேன். உனக்கா சொர்க்கவாசல் திறந்தது என்று கேட்கிறீர்களா? ஆமாம்; எனக்குத்தான் சொர்க்கம் சுலபத்தில் வழிவிட்டது. 'அரகர மகாதேவா' என்றேன். அம்மையை அணைத்தபடி அப்பன் ரிடப வாகன ரூபராய் அருள் மழை பொழிந்தான். ஆனந்தமாக சொர்க்க பூமிக்கு வந்துவிட்டேன்."

நாயன்மார்கள் ஸ்தம்பித்து விட்டார்கள். காரைக்கால் அம்மை, "இது உண்மையா?" என்றார்.

"சந்தேகம் வேறா? ஐயமிருந்தால் திருவிளையாடல் புராணம் மாபாதகம் தீர்த்த படலத்தைப் பாருங்கள்" என்றார் அய்யர்.

"பாபியாகிய உமக்கு மாத்திரம் இவ்வளவு சுலபத்தில் சொர்க்கலோக வாழ்வு கிடைக்கக் காரணம் என்ன?" என்று கேட்டார் சிறுத்தொண்டர்.

"இதுதான் காரணம்" என்று தன் பூணூலை உருவிக் காட்டினார் அய்யர்.

## கள்ளியும் ரோஜாவும்

நாம் வதியும் தமிழகத்தை ஒரு பூந்தோட்டமாக நினைத்துப் பார்த்தால், சிலப்பதிகார ரோஜாவும், சீவகசிந்தாமணி எனும் செண்பகமும், குண்டலகேசி பூங்கொத்தும், மணிமேகலை மல்லிகையும், அகம்புறமென்ற அன்றலர்ந்த முல்லைகளும் மணம் பரப்பிடக் காணுகிறோம். அந்த மலர்களின் மணத்தை மொண்டு மொண்டு தரும் தென்றலாக பாரதியார் – பாரதிதாசன் கவிதைகளும் மிதந்திடுவதைக் காணுகிறோம். இத்தகைய சீர் குலுங்கும் நந்தவனத்திலே ஒரு

மூலையிலே கள்ளிக்காடும் இல்லாமலில்லை. வாசமற்ற கனகாம்பர மும் வைக்கப்படாமலில்லை. மாலை வேளையிலே உல்லாசமாக உலாவல் நடத்த முடியாதபடி பயமுறுத்துகின்ற பாம்புகள் வாழும் பெரும் புற்றுக்களும் தோன்றாமலில்லை.

கள்ளி என்கிறேன். சிலருக்குக் கடுமையாகக் கூடத் தெரியலாம். உள் நுழைந்து பார்க்காத காரணத்தால் கம்பராமாயணம் தமிழகப் பூங்காவிலே கள்ளியாகத்தான் வளர்ந்துவிட்டது. கள்ளி மலரிலே அழகுண்டு. கம்பர் காதையிலே கவிதை நயம் இருப்பது போல! கள்ளி மலரிலே நறுமணம் கிடையாது. கம்பர் சித்திரத்திலே இன உணர்வு இல்லாதது போல!

... தமிழ் உணர்ச்சிக்கு முட்டுக் கட்டை போடுவது ராமாயணம்!

சிலப்பதிகாரத்தை ரோஜாவென்று குறிப்பிட்டேன்; ரோஜாவுக்கு முள் இருப்பதால்.

சிலப்பதிகாரத்திலே கற்பனைக்கெட்டாத சம்பவங்கள் இருக்க லாம். ஆனால் சிலம்பு ஒலிக்கும்போது செந்தமிழ்ப் பண்பு ஒலிக் கிறது. சேரனின் வீரமும், சோழனின் மனவளமும், பாண்டியனின் நேர்மையும் – மொத்தத்தில் மூவேந்தர் ஆண்ட மூன்று பெரும் நாடு களைப் பற்றிய குறிப்புகளும் நிறைந்து கிடக்கின்றன. இளங்கோ தந்த அந்த இன்பப் புதையலிலே! சேரனின் தம்பி தயாரித்த தங்கரோஜா சிலப்பதிகாரம்!

## ஆபாசமே ஆபாசம்!

அரிக்கும் அரனுக்கும் – அதாவது ஆணுக்கும் ஆணுக்கும் பிறந்தவர்தான் அய்யனார் என்பது ஆபாசமில்லையாம். அதை ஆபாசம் எனக் கூறியது ஆபாசமாம்!

தாருகாவனத்து ரிஷி பத்தினிகளைச் சிவனார் கற்பழித்த கலை ஆபாசமில்லையாம். அதை ஆபாசம் எனக் கூறியது ஆபாசமாம்!

"முழு நிர்வாணமாக வந்து அன்னம் பரிமாறு" என்று அனுசூயாவைப் பார்த்து மும்மூர்த்திகளும் கோரியது ஆபாசமில்லையாம். இந்த முட்டாள்தனங்களை நம்பாதீர் என முழக்கியது ஆபாசமாம்!

## ஆடிக் காற்றே!

ஆடிக் காற்றே மரங்களை ஏன் இப்படி ஆட்டி வைக்கிறாய்? மந்திரவாதி பேயாட்டி வைப்பது போல ஏன் ஆட்டி வைக்கிறாய்? மந்திரிமார்கள் மக்களை ஆட்டி வைப்பது போல ஏன் ஆட்டி வைக்கிறாய்? ஏன் வாட்டி வதைக்கிறாய்? என்ன குற்றம் செய்தன அந்த மரங்கள்? செழித்தது தவறா? சீர் தந்தது தவறா? மறுமலர்ச்சி பெற்றது தவறா? மணந்தரும் பூக்களை, கிளைக் கொண்டைகளில் சூட்டி நின்று, சௌந்தர்ய மோகினிகளாய்க் காட்சி தந்தது தவறா? எது தவறு? ஏன் தண்டிக்கிறாய் ஆடிக் காற்றே! அந்தக் காரணத்தைச் சொல்! சொல்லமாட்டாய்! உன்னைப் போன்று அரசாங்கமும் எங்களுக்குக் காரணம் சொல்லவில்லை! ஆடிக்காற்றே! மண்ணை அள்ளிக் கண்ணில் போட்டால் பயந்துவிடுவோமா? கண்ணீர்ப் பிரயோகத்தைவிடக் கடுமையானதா உன் கைகள் வாரியிறைக்கும் மணல் துளிகள்?

சர்வாதிகாரிகள் உன்னைப் போலத்தான் அகோர இரைச்சல் போட்டார்கள். அராஜக வெறியாட்டம் நடத்தினார்கள். அவர்களும் நீயும் ஒரே ரகம். அந்த உண்மையை ஊளைத் தொனியில் பாடிக்காட்டும் ஆடிக்காற்றே!... ஆடி ஓய்ந்ததும் அடங்கி விடுவாய். அடங்கிய பிறகு, உன்னைப் போல் ஆட்டம் போட்ட அரசாங்க நண்பனை – அந்தரங்கத் தோழனைச் சந்திக்கப் போவாய்! அய்யோ பாவம்! அப்போது அவன் உனக்கு முன்னே பொந்துக்குள் போயிருப்பான்.

# இலங்கை மன்னர் பரம்பரை

...இந்தியாவில் உள்ள வங்கதேசத்தில் ஓர் அரசு. அந்த அரசில் ஒரு ராஜகுமாரி. சுபதேவி என்பது அவளுடைய பெயர். அவள் வீட்டுக்கு அடங்காப் பெண். ஆடம்பரமானவள். குடும்பத்திற்குத் தகுதியற்றவள். திருத்தப் பார்க்கிறார்கள். திருத்த வழியில்லை. தன்னைத் திருத்த முற்படுகிறார்கள் என்கிற ஆத்திரத்தின் காரணமாக அரண்மனையை விட்டு வெளியேறுகிறாள். வெளியில் நடக்கிறாள். பல கல் தொலைவு நடக்கிறாள். வழியில் சிங்கன் என்கிற ஒரு முரட்டு மனிதனைப் பார்க்கிறாள். அந்தச் சிங்கன் – மனிதர்களை அடித்துக் கொன்று சாப் பிடுபவன். அவன் அந்தப் பெண்ணைப் பார்க்கிறான். அழகாக இருந்த காரணத்தால் கொல்ல மனம் இல்லை. திருமணம் செய்து கொள்ள விரும்புகிறான். அவளும் சம்மதிக்கிறாள். வேறு வழியில்லை. மறுத்தால் உயிர் போகும் என்பதால். அவளைத் திருமணம் செய்து கொண்டு அந்த சிங்கன், என்கிற முரடன் சுபதேவியை ஒரு பெரிய குகைக்குள்ளே கொண்டுபோய் அடைத்து அந்தக் குகையினுடைய வாயிலை ஒரு பெரும் பாறாங்கல்லால் அடைத்துவிட்டு, அவன் வெளியில் போவதும், மாலை நேரத்திலே திரும்பி வருவதும், அந்தக் கல்லை எடுத்துவிட்டு உள்ளே சென்று களித்திருப்பதும் அவனுடைய வாழ்க்கை. அவர்களுக்கு அந்தக் குகையிலே இரண்டு குழந்தை களும் பிறக்கின்றன. ஆண் குழந்தைக்கு சிங்கபாகு என்றும், பெண் குழந்தைக்கு சிங்கவல்லி என்றும் பெயர் வைக்கிறார்கள். அவர்கள் வளர்கிறார்கள்.

வளர்ந்துவிட்ட பருவத்திலே ஆண் மகன் தாயைப் பார்த்து, "நம்மை இங்கே உள்ளே அடைத்து வைத்துவிட்டு அப்பா இப்படி எங்கேயோ போய்விடுகிறாரே என்ன மர்மம்?" என்று கேட்கிறான். தாய் உண்மைகளையெல்லாம் அவனிடத்திலே சொல்லுகிறாள். "எவ்வளவு நாளைக்கு அம்மா இங்கே அடைந்து கிடப்பது? தந்தைக்குரிய பலம் எனக்கும் உண்டு. வாருங்கள் என்னோடு" என்று

சொல்லி தாயை ஒரு தோளிலும், தங்கையை ஒரு தோளிலும் எடுத்துக் கொண்டு, தந்தைக்குரிய பலம் அவனுக்கும் இருந்த காரணத்தால் அந்தப் பெரும்பாறைக் கதவைக் கைகளால் இடித்துத் தள்ளிவிட்டு அங்கிருந்து விடுபட்டு வெளியே சென்று விடுகிறான்.

வெளியே சென்ற சிங்கன் திரும்பிவருகிறான், மனைவியைக் காணவில்லை. மக்களைக் காணவில்லை. அவர்களைத் தேடி அலைகிறான். அவர்கள் கிடைக்கவில்லை. பிறகு 'லாலா' என்கின்ற ஒரு நாட்டின் பக்கம் போகிறான். இவர்கள் கிடைக்காத ஆத்திரத்தில் எதிரே கண்ட மனிதர்களையெல்லாம் அடித்துச் சாப்பிடுகிறான்.

லாலா நாட்டில் பெரும் அமளி. இந்தச் சிங்கன் என்கின்ற முரடனைப் பிடித்துத் தருகின்றவர்களுக்கு அந்த நாட்டையே பரிசாக அளிப்பதாக அந்த நாட்டு மக்கள் அறிவிக்கிறார்கள். அந்த சிங்கனை அவனுடைய மகனான சிங்கபாகுவே கொன்று தந்தையின் தலையை தன் கையில் எடுத்துக் கொண்டு போய், கொலு மண்டபத்தில் காட்டி, தந்தை தலைக்குப் பரிசாக லாலா நாட்டையே ஆளுகின்ற பாத்தியதையைப் பெறுகிறான்.

நாட்டை ஆளும் பாத்தியதை கிடைத்தவனுக்கு ராணி வேண் டாமா? அந்தப் பாத்தியதை வேறு யாருக்கும் போய்விடக்கூடாது என்பதற்காக தன் தங்கையையே தாரமாக ஆக்கிக் கொள்கிறான். சிங்கபாகு என்ற அண்ணனுக்கும், சிங்கவல்லி என்ற அவனது தங்கைக்கும் ஒன்றல்ல, இரண்டல்ல, பதினாறு இரட்டைக் குழந்தை கள். அந்தப் பதினாறு இரட்டைக் குழந்தைகளில் ஒரு குழந்தைதான் விஜயன். அந்த விஜயன் எழுநூறு தோழர்களைத் தன்னோடு இணைத்துக் கொண்டு ஊரையே வேட்டையாடுகிறான்; மோசமான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறான். விஜயன் இப்படிப்பட்ட கேவலமான நடவடிக்கைகளில் ஈடுபட்டதைப் பார்த்த தந்தை சிங்கபாகு, விஜயனையும் அவனது தோழர்கள் எழுநூறு பேரையும் ஒரு சப்பலில் ஏற்றி "எங்கேயாவது போய்த் தொலை" என்று அனுப்பு

கிறான். கப்பல் பல நாள் கடலிலே அலைந்து கடைசியாக ஒரு தீவைச் சேர்கிறது. அந்தத் தீவுதான் இலங்கைத் தீவு. அந்த இலங்கைத் தீவுக்கு மன்னனாக முடி சூட்டிக் கொள்கிறான் விஜயன், அவனுடைய பரம் பரை தான் சிங்களவர்கள்.

...இலங்கையின் சரித்திரப் புத்தகம், தமிழ் மாணவர்களுக்குப் பாடமாக வைக்கப்பட்டிருக்கின்ற நான்காம் வகுப்பினுடைய புத்தகம். அதிலே தீட்டப்பட்டிருக்கின்ற சரித்திரக் குறிப்புதான்...

## கழுத்திலே ஒரு முடிச்சு... அதற்கு ஒரு கதை

...ஒருமுறை உங்கள் கழுத்தைத் தொட்டுப் பார்த்துக் கொள் ளுங்கள். இந்தக் கழுத்திலே ஒரு முடிச்சு இருக்கும். ஓர் எலும்பு முடிச்சு. ஏனென்றால் அந்த எலும்பு முடிச்சுக்கு விஞ்ஞான ரீதியாகக் காணப்படுகின்ற ஆராய்ச்சியின் மூலம் நமக்குக் கிடைக்கின்ற தகவல் – உண்மை. கழுத்தை வளைக்க நிமிர்த்த, இப்பக்கம், அப்பக்கம் ஆட்ட உதவி புரிகின்ற சக்தியைத் தருகின்ற ஓர் எலும்பு முடிச்சு...

இந்த எலும்பு முடிச்சுக்குக் கூட புராணக் கதை இருக்கிறதே!...

ஒரு காலத்திலே தேவர்களும், அசுரர்களும் திருப்பாற்கடலைக் கடைந்தார்கள். வீரர்களான (!) தேவர்கள் வாசுகி என்கிற பாம்பி னுடைய வால் பக்கத்தையும், கோழைகளான (!) அசுரர்கள் அந்தப் பாம்பினுடைய தலைப்பாகத்தையும் பிடித்துக் கொண்டு மேரு மலையை மத்தாக ஆக்கி திருப்பாற்கடலைக் கடைந்தார்கள்.

ஒரு பக்கத்திலே அமிர்தம் உருவாயிற்று. இன்னொரு பக்கத்திலே ஆலகால விஷம் உருவாயிற்று.

அமிர்தத்தை தேவர்கள் எடுத்துக் கொண்டார்கள் – தன்னல மற்றவர்கள்!

“அமிர்தம் எங்களுக்கு இல்லையா?” என்று அசுரர்கள் கேட் டார்கள். ‘இல்லை’ என்றார்கள் தேவர்கள்.

ஆலகால விஷம் பொங்கிற்று. ஆலகால விஷம் பொங்கினால் அகில உலகத்திற்குமே ஆபத்து என்பதை அறிந்த எல்லா மக்களும் தேவர்கள் உட்பட அனைத்துப் பேரும் பரமசிவனிடத்திலே ஓடிச் சென்று "எங்களைப் பாதுகாப்பாயாக! அபயம்! அபயம்!" என்று கூறினார்கள்.

உடனே பரமசிவன் மக்களையெல்லாம் காப்பாற்ற, பொங்கி வந்த ஆலகால விஷத்தை எடுத்து வாயிலே போட்டுக் கொண்டார்.

பக்கத்திலே இருந்த பார்வதி, விஷம் சிவனுடைய வயிற்றுக் குள்ளே போனால் ஆபத்தாயிற்றே என்று கழுத்தைப் பிடித்துக் கொண்டார். ஆகவே வயிற்றுக்குள்ளே விஷம் போகாமல், கழுத் தோடு நின்றுவிட்டது.

சிவனுக்கு கழுத்திலே நின்ற விஷம் தான் ஒரு கட்டியாக ஆயிற்று. அதுமுதல் உலகத்திலே இருக்கின்ற எல்லா ஆண்களுக்கும் கழுத் திலே ஒரு கட்டி...

## சிறை கொடியது

சுரைக்காய்ப் பிஞ்சின் தலையில் மிளகாய் பழத்தைச் சொருகி இடையில் மல்லிகை இலைகளையும், சிறகாய் பின்புறம் தாழை மடலையும் வைத்தால், பச்சைக்கிளியே!

**உன்போல் படைப்பு! உன்போல் படைப்பு!**
**வட்டத் தலையே! சிவப்பு மூக்கே!**
**சின்னச் சிறகே! நீண்ட வாலே!**
**கன்னற் கிளியே, சொன்னது பிசகே!**
**வர்ணனை கேட்டு வாழ்த்த மறுப்பாய்.**
**புகழ்ச் சொல் கேட்டும் போற்றிடமாட்டாய்!**
**காரணம் அறிவேன் சின்னக் கிளியே!**
**கூண்டில் உன்னைப் போட்டதனாலே**

**தூண்டிற் புழுவாய்த் துடிக்கிறாய் நீயும்!**

**சிறையில் உன்னை அடைத்து மகிழ்ந்தேன்.**

**இன்று தெளிந்தேன்.**

**சிறை மிகக் கொடியது! சிறை மிகக் கொடியது!**

## விஞ்ஞானிக்குத் தோன்றாதது...

மகத்தான விஞ்ஞானி ஓர் அழகான பூனை வளர்த்தான். அது உள்ளே வந்து போவதற்காக கதவில் ஒரு பெரிய ஓட்டை செய்தான். அந்தப் பூனையும், அதன் வழியே வந்து போய்க் கொண்டிருந்தது. சில நாளில் அந்தப் பூனை ஒரு குட்டி போட்டது.

அந்தப் பெரிய விஞ்ஞானி, பெரிய துவாரத்தினருகே இன்னொரு சிறிய ஓட்டையைப் போட்டான். இது எதற்காக என்றார்கள் அவனுடைய நண்பர்கள். குட்டி வந்து போவதற்காக என்றான் அந்த விஞ்ஞானி. பூனைக்காக உள்ள பெரிய ஓட்டையிலே குட்டியும் வந்து போக முடியாதா என்று அவர்கள் கேட்ட பிறகுதான்... ஆகா இந்த யோசனை நமக்கில்லாமல் போயிற்றே என்று நினைத்தானாம் அந்த விஞ்ஞானி.

## அடுத்த பிறவியில் ஐந்து கணவன்

"நளா! ஏனம்மா இப்படி எப்போதும் அழுது கொண்டே யிருக்கிறாய்?"

"காரணமா கேட்கிறாய்; இதயா! தணலிற் புழுவாய் தவிக்கிறேன் நான் என்பதை நீ அறிய மாட்டாயா? அதோ ஜோடியாகக் கூவும் பறவைகளின் சங்கீதத்தைக் கேட்கிறாயா நீயும்! சோலைப் புறமிருந்து காதலர் மீட்டும் வீணாகானம் எத்தகைய விரகதாபத்தை ஒரு பருவ மங்கைக்கு எழுப்பும் என்பதை நீ அறியமாட்டாயா? அறிவாய்! அறிந்தும் எனக்கு ஆறுதல் கூறுவதற்காக இப்படி மௌனம் சாதிக்கிறாய் – இல்லையா?

“உண்மைதான் நளாயினி! உலகா உன்னைப் பத்தினி என வாழ்த்தினாள். அதையும் மறைந்து நின்று கேட்டேன். அந்தப் புகழ் வெளிச்சம் மட்டுமே போதுமென்று திருப்தி அடைய வேண்டியது தான்.”

“இதயா! உண்மையைச் சொல், நான் பத்தினியா? எப்படி? எப்படி?”

“ஆமாம்! குஷ்டரோகம் பிடித்த கணவனைத் தாசி வீட்டுக்கு அனுப்பியிருக்கிறாயே!”

“கிண்டல் செய்யாதே இதயா! குஷ்டரோகம் பிடித்தவனோடு கூடிக் கிடக்க எனக்கு விருப்பமில்லை. என்னை ஆசையோடு அழைக்கிறான். அணைக்கவோ என் கை நடுங்குகிறது. ஆகவேதான் அவனைத் தாசி வீட்டுக்கு அனுப்பினேன். என் அழகுக்கு ஆபத்து வராமல் அவன் ஆவல் தீர்ந்தால் சரியென்று எண்ணினேன். இந்தத் தந்திரம் உனக்குத் தெரியாதா இதயா!”

“நானறியாதது ஒன்றுண்டா நளாயினி? ஆனாலும் உலகா நம்பியிருக்கிறாள். உன் பதிபக்தியை! குஷ்டரோகியைத் தாசி வீட்டுக்குத் தலையிலே தூக்கிக் கொண்டு போனதைப் பெரிய பதிபக்தி என உலகா எண்ணுகிறாள்”

“தலையில் தூக்கிக் கொண்டுபோனேன் என்கிறாயே நீயும்! திருத்திக்கொள். கூடையில் வைத்துத் தலையில் தூக்கிக் கொண்டு போனேன். குஷ்டரோகியைக் கையால் தொட்டுத் தலையில் தூக்கிப் போக எனக்கென்ன பைத்தியமா? அதெல்லாம் ஜாக்கிரதையாகக் கூடையில் வைத்துத்தான் கொண்டு போனேன்!”

“நளா! உன் கணவன் எவ்வளவு கடுமொழிகளைக் கூறினாலும் எதிர்த்து ஒரு சொல் கூறாத கற்பரசி என நேற்றுக் கூட உலகா என்னிடம் உன்னைப் புகழ்ந்தாள்”

"கணவன் திட்டினான். நான் மறுமொழி பேசவில்லை. உண்மை தான்! குஷ்டரோகிதானே திட்டுகிறான் என்று அலட்சியப்படுத்தினேன். நானும் அவனுடன் பேசினால் பேச்சு வளரும். அந்த வாதத்தின் காரணமாக அவனோடு நெருங்கி நின்று வார்த்தையாட வேண்டும். அதற்காகத்தானடி அந்தக் குஷ்டம் பிடித்தவன் குரைத்துக் கொண் டிருக்கட்டும் என்று விட்டுவிட்டேன்"

"உம். எப்படியோ, பத்தினி என்று பட்டம் பெற்றுவிட்டாய். பார் புகழும் பதிவிரதை – பதிபக்தி மிகுந்தவள் என்றெல்லாம் உலகா புகழ்ந்து விட்டாள் உன்னை!"

"உலகாவுக்கு என்னடி தெரியும். என் உள்ளத்தில் இருக்கும் எரிமலை? பத்தினிப் பட்டம் போதுமா, பருவக்களை சொட்டும் இந்தப் பரிதாபத்திற்குரியவளுக்கு? சொல்லடி இதயா, சொல்லு! சுக வாழ்வுக்கு வழி சொல்லு!"

"வழி சொல்கிறேன் நளாயினி. நான் ஒரு புதிய வரம் தருகிறேன். இந்த ஜென்மத்தைச் சீக்கிரம் கழித்துவிட்டு விரைவில் அடுத்த ஜென்மம் எடு! அந்த ஜென்மத்தில் நீ திரௌபதியாகப் பிறக்கப் போகி றாய்! ஒரு கணவன் இருந்தும் உனக்கு உற்சாகமில்லை; உல்லாச மில்லை; உள்ளமோ வேதனைக்களமாயிருக்கிறது உனக்கு! ஆகவே அடுத்த பிறப்பில் ஐந்து கணவரோடு ஆனந்த வாழ்வு வாழ அருமை யான வரம் தருகிறேன்"

## புகழே நீ ஒரு புதிர்

புகழே! நீ ஒரு பனிக்கட்டி. உன்னைக் கைக்குள்ளேயே வைத்துக் கெட்டியாகப் பிடித்திருந்தாலும் நீராகக் கரைந்து மறைந்து விடு கிறாய்.

புகழே! நீ ஒரு மதுக் கலயம். உன்பால் வீழ்ந்த ஈக்கள் எழுந்ததே யில்லை.

புகழே! நீ ஒரு நிழல். உன்னைப் பற்றிக் கவலைப்படாதவர்களைத் தொடர்ந்து கொண்டேயிருப்பாய்.

புகழே! நீ ஒரு புதிர்! உன்னைப் பற்றி விளக்கவே என்னால் முடியாது.

## மலையைத் தூக்குவேன்!

"மலையொன்றைத் தலையில் தூக்கிக் கொண்டு நாடு முழுவதும் பவனி வருவேன். இது என்னுடைய முதல் திட்டம். வானத்தை வில்லாக வளைத்து, அந்த வில்லுக்கேற்ற நாணாக மணலைக் கயிறாகத் திரித்துக் காட்டுவேன். இது என்னுடைய இரண்டாவது திட்டம். அடுத்தடுத்து இன்னும் பல அற்புதத் திட்டங்களை வைத் திருக்கிறேன். அவற்றைப் பின்னர் இந்த நாட்டு மக்களின் முன் னிலையில் நிறைவேற்றிக் காட்டுவேன்"

இவ்வாறு பொது மக்களின் மன்றத்தின் நடுவே தோள் தட்டி அறைகூவல் விடுத்தான் ஒரு வாலிபன். மக்கள் அவன் வார்த்தை களை வாய் பிளந்தவாறு கேட்டு மயங்கிப் போயினர். இப்படி ஒரு வாலிபன் பேசிக் கொண்டு திரிவது மன்னன் காதுக்கும் எட்டியது. அவனைக் கொலுமண்டபத்திற்கு அழைத்து வருமாறு ஆணை பிறப்பித்தார். பீடுநடை போட்டுக் கொலு மண்டபத்தில் நுழைந்த வாலிபனை மன்னர் அலட்சியப்படுத்தாமல் அவன் மக்களிடம் அறிவித்த திட்டங்கள் சாத்தியமானவைதானா என்று வினவினார்.

"இயலாதது என்று இவ்வுலகில் எதுவுமில்லை அரசே! நான் அறிவித்த திட்டங்களை நிச்சயமாக நிறைவேற்றுவேன்" என்று நிமிர்ந்து நின்று முழங்கினான் அந்த வாலிபன்.

"அப்படியானால் வீரமிக்க வாலிபனே! உன் முதல் திட்டத்தை என் எதிரில் செய்து காட்டுக. தயார்தானா?"

மன்னரின் இந்த ஆவல் ததும்பிய கேள்விக்கு அவன் மிக்க அமைதியாகப் பதில் அளித்தான்.

"மன்னர் மன்னவா! எதற்கும் சில வசதி வாய்ப்புகள் வேண்டு மன்றோ? நான் நாட்டு மக்களிடமும், தங்களின் திருமுன்னும் கூறிய செயல்களை நிறைவேற்றியே தீருவேன். ஆனால் ஒன்று! நான் வெகு நாட்கள் பயணம் செய்து களைத்துப் போயிருக்கிறேன். தங்களுக்கு விருப்பமிருந்தால் அரண்மனைக்கு விருந்தினனாக ஓரிரு மாதங் கள் என்னை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். உடலில் வலிவு மிகுந்ததும் என்னுடைய முதல் திட்டமான மலையைத் தலையில் தூக்கும் காரியத்தைச் செய்து காட்டுகிறேன்."

மன்னர் மகிழ்ச்சியுடன் அவன் வேண்டுகோளை ஏற்றுக் கொண டார். "ஓரிரு மாதங்கள் என்ன, மூன்று மாதங்கள் முழுமை யான காலமும் எடுத்துக் கொள்க, அந்த மூன்று மாத காலமும் அரண்மனையில் உனக்குத் தேவையான வசதிகள் அனைத்தும் வழங்கப்படும்" என்று கூறி அவனைத் தட்டிக் கொடுத்தார்.

வாலிபனின் வீரச் செயலைக் காண, பொது மக்கள் நாட்களை எண்ணிக் கொண்டிருந்தனர்.

அவனுக்கு அரண்மனையில் உல்லாசமான வாழ்க்கை; உடலுக்கு வலிவு தரும் உணவு வகைகள், உள்ளத்திற்குக் களிப்பூட்டும் பானங்கள், கேட்டதெல்லாம் கிடைத்தன அவனுக்கு.

அவன் வெளியிட்ட திட்டங்களை நிறைவேற்றி விடுவானே யானால் அவனையே தனது படையின் தலைமைத் தளபதியாக நியமித்துக் கொள்ளப் போவதாக மன்னன் அமைச்சர்களிடம் சொல்லிக் கொண்டிருந்தான்.

மூன்று மாதங்கள் முடிவுற்றன. முதல் திட்டம் மலையைத் தலையில் தூக்கிக் கொண்டு நடக்கும் திட்டம் நிறைவேற்றப் படுவதற்கான நாள் அறிவிக்கப்பட்டது. நாடு முழுவதும் மலையடி வாரத்தில் கூடியது. மன்னரும் அமைச்சர் பெருமக்களும், அரண் மனை அலுவலாளரும் தத்தமக்குரிய இடங்களில் அமர்ந்தனர்.

வாலிபன் வண்ண ரதமொன்றில் வந்து இறங்கினான். அவன் மேனி புதுப் பொலிவுடனும், வலிவுடனும் விளங்கியது. மூன்று மாத கால அரண்மனை வாசத்தின் விளைவு உடற்கட்டில் நன்கு தெரிந்தது.

அவனைக் கண்ட மன்னரும், மக்களும் கையொலி செய்து வரவேற்றனர். முரசுகள் அதிர்ந்தன. இசைக் கருவிகள் ஒலித்தன. வாலிபன் தன் இரு கைகளையும் உயர்த்தினான். அனைத்து ஒலி களும் நின்று அமைதி நிலவிற்று. அவன் மலையின் அடிவாரம் நோக்கிச் சென்றான். அனைவரது விழிகளும் இமைக்காமல் நடக்கப் போகும் நிகழ்ச்சியை உற்று நோக்கிக் கொண்டிருந்தன.

"நான் மலையைத் தலையில் தூக்கிக் கொண்டு நடக்கத் தயார்" என்று கூவினான் அவன். ஒரே மகிழ்ச்சி ஆரவாரம்.

ஆனால் நடந்தது என்ன? அவன் மலையைத் தூக்கவில்லை. திரும்பத்திரும்ப "நான் மலையைத் தூக்கிக் கொண்டு நடக்கத் தயார்" என்பதையே சொல்லிக் கொண்டிருந்தான்...

" ஏன் இதையே சொல்லிக் கொண்டிருக்கிறாய்? செய்து காட்டு" என்று மன்னர் உரத்த குரலில் கூறினார்.

அதற்கு வாலிபன் பதில் சொன்னான்;

"மன்னா; மலையைத் தலையில் தூக்கிக் கொண்டு நடப்பதாகத் தான் சொன்னேன். அதை மறந்துவிடாதீர்கள். நீங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து இப்போதே இந்த மலையை என் தலையில் தூக்கி வையுங்கள். அதைத் தூக்கிக் கொண்டு நாடு முழுவதும் நடக்கிறேனா இல்லையா என்பதைப் பிறகு பாருங்கள்"

## முதியவர் தீர்ப்பு

கரிகாற் பெருவளத்தான் 'சின்னஞ் சிறுவனாக இருந்த போது நாடாளும் பொறுப்பை ஏற்க வேண்டியவனானான். அவனிடத்திலே

முறையீடு செய்துகொள்ள இரு தரப்பார் வந்தனர். நீதிமன்றத்திலே அமர்ந்த அந்த இளைஞன் அளிக்கின்ற தீர்ப்பை இரு தரப்பாரும் ஏற்றுக் கொள்வார்களா? அவையோர்தான் அதை ஏற்பார்களா என்ற சந்தேகத்தின் மீது, இளைஞனான கரிகாற் பெருவளத்தான் கொக்கு போல வெண்மையான தாடியும் மீசையும் வைத்துக் கொண்டு நீதிமன்றத்திலே அமர்ந்து தீர்ப்பு வழங்கினான்.

இவ்வளவு வயதானவர் தீர்ப்பை வழங்குகிறாரே, நல்ல தீர்ப்புத் தான் என்று அந்தத் தீர்ப்பை ஏற்றுக் கொண்டு போனார்கள்.

## கூற்றுவன் எப்படிப் பறித்தான்?

கிள்ளிவளவன் என்ற மாமன்னனுக்கு உற்ற தோழர் நப்பசலை யார் என்னும் புலவர்...

கிள்ளிவளவன் இறந்துவிடுகிறான். அவன் எப்படி இறந்திருக்க முடியும் என்று கேள்வி கேட்கிறார் புலவர்.

எதிர்த்தோ, உறவாடியோ, சண்டையிட்டோ, கிள்ளிவளவ னுடைய உயிரை எமனால் பறிக்க முடியாது. பிறகு எப்படிப் பறித்திருப்பான்?

**பாடுநர் போலக்**
**கைதொழுதேத்தி**
**இரந்தன்றாகல்**
**வேண்டும்.**

எமன் ஒரு கவிஞன் வேடம் போட்டுக் கொண்டு போய்க் கிள்ளி வளவனுடைய உயிரைத் 'தா' என்று கேட்டிருப்பான். கிள்ளிவளவன் கூற்றுவனைப் புலவனெனக் கருதித் தனது உயிரைக் கொடுத்திருப் பான்...

# வீரன் தலை கவிழ்ந்தது ஏன்?

அந்த மன்றத்தில் அன்று கூடியிருந்தோர் ஒரு குறிப்பிட்ட குழுவைச் சேர்ந்தவர்கள்.

ஊரிலுள்ள எல்லோரையும் பற்றி ஆய்வு நடத்தி வீண் காலம் கழிக்கும் இயல்புடையவர்கள். இன்றும் அவ்வாறே ஒருவரோடு ஒருவர் போட்டியிட்டுக் கொண்டு, ஊர்க் கதைகளைப் பேசிக் கொண்டிருந்தனர், யாரையாவது இகழ்ந்து பேசுவது என்பது அவர்களுக்கு இனிமையான பொழுது போக்கு, பகை புகுந்தது எனக் கண்டு ஊரின் படை திரண்டால் இந்தக் கூட்டத்தினர் ஓடிப் பதுங்கிக் கொள்வர். பகை முடிந்து ஊர்ப் படையினர் வெற்றிக்கு விழா எடுத்திடும் போது ஒளிந்தோர் திரும்பி வந்து எப்படிக் கிடைத்தது வெற்றியென வீண் உரையாடல் நடத்துவர். ஊர்ப் பணிகளிலும் ஈடுபடும் ஊக்கமில்லை. ஊரைக் காத்திடும் வீரச் செயல்களிலும் நாட்டமில்லை. வக்கணை பேசிப் பொழுதைக் கழிப்பதில் மட்டும் பேரார்வம்.

தங்கள் பணியின் நிமித்தம் அந்த மன்றத்தைக் கடந்து செல்வோர் அவர்களைப் பொருட்படுத்துவதில்லை, வணிகர்கள் அவ்வழி செல்வர். வீரர்கள் அவ்வழி நடந்திடுவர். அழகு மங்கையர் அவ்வழி ஏகிடுவர். அவர்கள் யாரும் அந்தக் குழுவினரைக் கண்டு மதிப்புத் தந்ததில்லை. தங்கள் பணியுண்டு தாங்களுண்டு என்றே சென்றிடுவர்.

அன்று மட்டும் ஏனோ ஒரு வீரன் அந்த மன்றத்தைக் கடந்திடும் போது தலையைக் கவிழ்த்து கொண்டான்.

அவன் கால்கள் தள்ளாடின. முதுமை அவனை வருத்திடவில்லை; காரணம் அது அவன் மீது ஆட்சி நடத்தவே தொடங்கவில்லை, நோய் அவனை அணுகிடவில்லை. மலைத் தோள் கொண்டவன்தான். கதிர் ஒளி பரப்பும் கண்கள்தான் அவனுக்கு. இரும்புச் சிலையொன்று

நடப்பது போல் நடப்பவன்தான். போர்க்களத்தில் பகைக் குலத்தின் இடுப்பு முறிப்பதில் புலிபோலத்தான் அவன்.

அந்த ஆற்றல் மறவன் அந்த மன்றத்தைக் கடந்திடும் போது புழுவாக நெளிவானேன்? புயல் காற்றிடைத் துரும்பாக அவன் உள்ளம் இருப்பதால்தானே பூனை போல் பதுங்கிச் செல்கிறான்!

எல்லோரையும் இகழ்ந்து பேசுவதையே தொழிலாகக் கொண்ட அந்தக் குழுவினரை அவன் அகன்ற விழியின் நோக்கே அலறிப் புடைத்து ஓடச் செய்துவிடும்.

ஆனால் அந்தப் பெருமித நோக்கு எங்கே?

அந்தப் பீடு நடை எங்கே?... யாரும் பதில் கூறவில்லை. மன்றத்தில் குழுமியிருந்த இகழ்ச் செயலாளர்களும் அந்த வீரனின் தளர்ந்த நடைக்குக் காரணம் அறியாது பல கதைகளைப் படைத்தனர்.

உண்மைக் காரணத்தை அவன் உளச் சான்று உரைத்திருக் கின்றது.

எல்லாப் புகழும் அவனுக்கு இருந்தும்கூட அந்தப் புகழைக் காக்க விரும்பும் மனைவி அவனுக்கு வாய்க்கவில்லை. அதனால்தான் இழித்துப் பேசுவதைத் தொழிலாகக் கொண்டவர்களின் முன்னால் செல்லும்போது அவன் உள்ளம் அவனைத் துளைத்தெடுக்கிறது. நடை தளர்கிறது. தலை கவிழ்கிறது.

## இளமைக் காலம்

பாரதப் போரில் அபிமன்யு நடத்திய போருக்கு இணையாக அர்ச்சுனன் கூட நடத்தவில்லை.

'ஏனெனில் தன்னுடைய மிக இளமையான மனைவியை வீட்டில் விடுத்து – விடைபெற்று – தாயிடத்தில் விடைபெற்று தந்தையும் வேறு போர்க்களத்தில் போராடிக் கொண்டு இருந்த நேரத்தில் தந்தை

யையும் காணச் சந்தர்ப்பம் இல்லாமல் போர்க்களம் புகுந்து, போரில் கையிழந்த போதும் நாக்கினால் – வாயால் வாளைக் கவ்விக் கொண்டு எதிரிகளைப் புறமுதுகிட்டு ஓடச் செய்கின்ற அளவுக்குப் போரிட்டு இறுதியாக ஜெயப்பிரதன் என்கிற ஒரு துரோகியினால் பின்னாலிருந்து குத்தப்பட்டு இறந்தான் வீர இளைஞனாக அபிமன்யு. அவனுடைய இளமைப் பிராயத்திலேயே தான் அந்த அற்புதத்தைச் செய்து காட்டினான்.

அதைப் போல்தான் இராமாயணத்தை எடுத்துக் கொண்டால் இராவணனால் கூட – கும்பகர்ணனால் கூட அல்லது வேறு பலதர நாயகர்களால் கூட நடத்திக்காட்ட முடியாத சாகசங்களை இராமனும் – இலக்குவனும் – அனுமனும் – சுக்ரீவனும் – அத்தனை பேரும் கதி கலங்கக் கூடிய அளவுக்கு – எதுவும் புரியாமல் திகைப்புறக் கூடிய அளவிற்குப் போரிட்டு அவர்களை ஓட ஓட விரட்டி இறுதியில் மாண்டு போனானே இந்திரஜித், அவனும் இளைஞன்தான். அவனும் தன் னுடைய இளமைத் துடிப்பைப் போர்க்களத்திலே காட்டி ராமாயணப் போராட்டத்தை, எப்படி பாரதப் போரில் அபிமன்யு போராடிய நாள் பிரசித்தி பெற்ற நாளோ – அதேபோல இந்திரஜித் போராடிய நாள் – புகழக் கூடிய நாள் என்கிற குறிப்பை ஏற்படுத்தக் கூடிய அளவுக்கு அவன் போர் புரிந்து காட்டினான்.

அபிமன்யுவினுடைய தந்தை அர்ச்சுனன் புகழ்பெற்ற வில் வீரன். காண்டீபன் என்கிற புகழைப் பெற்றது ஐம்பது வயதிற்கு மேலல்ல. அந்தப் புகழைப் பெற்றது அவன் துரோணரிடத்தில் மாணவனாக இருந்த போதுதான். அப்போது – பாண்டவர்களும் கௌரவர்களும் துரோணரிடத்திலே மாணவர்களாக இருந்தபோது, அவர்களது பயிற்சி முடிந்து சோதனை செய்வதற்காக துரோணர் பாண்டவர் களையும், கௌரவர்களையும் அழைத்து ஒரு பெரிய மரத்தைக் காட்டி – அந்த மரத்தில் அமர்ந்திருந்த ஒரு கிளியைக் காட்டி – ஒவ்வொருவரையும் வில்லை வளைக்கச் சொல்ல வில் வளைத்து

நின்ற துரியனைப் பார்த்து என்ன தெரிகிறது? என்று கேட்க அவனும் மரம் தெரிகிறது, இலை தெரிகிறது, கிளை தெரிகிறது என்று வர்ணித்துக் கொண்டே போக 'நீ வேண்டாம்' என்று கூறிவிட்டு துரோணர் எல்லா வீரர்களையும் பார்த்துக் கேட்க, ஒவ்வொருவரும் மரம் தெரிகிறது, கிளை தெரிகிறது, இலை தெரிகிறது என்று கூற அத்தனை பேரையும் ஒதுக்கிவிட்டு இறுதியாக அர்ச்சுனனை அழைத்து "நீ பார். என்ன தெரிகிறது?" என்று கேட்க, அர்ச்சுனன் 'என்னுடைய வில்லில் பூட்டப்பட்டிருக்கின்ற அம்பின் நுனியும் மரக் கிளையில் அமர்ந்திருக்கின்ற கிளியின் கழுத்தும்தான் தெரிகிறது" என்று சொன்னானாம்.

உடனே அம்பை விடுத்தான். கிளியின் கழுத்து கீழே விழுந்தது.

## தலைவனின் பரிசு

சேனை தழையாக்கிச் செங்குருதி நீர் தேக்கி ஆனை மிதிக்கும் அருஞ்சேறாம் போர்க் களத்தில் எதிரிகளின் முடி நடுவதற்கு முரசம் ஆர்த்துவிட்டது, அழைப்பு வந்துவிட்டது அந்த வீரனுக்கு.

படை முழக்கம் பாராய் கண்ணே – தடையின்றி விடை தாராய் பெண்ணே! என வேண்டுகிறான். விழுப்புண்படாத நாளெல்லாம் வீணான நாட்கள் எனக் கருதும் வீர மகன். விழிப் பண்பாடும் வடி வழகி முத்து நகை சிந்துகின்ற இதழ் குவித்து முத்தமீந்து 'வெற்றி யோடு திரும்பிடுக அத்தான்' என்று அணைத்து நின்றாள், கண்ணீரை அவனுக்குத் தெரியாமல் அவன் தோளில் துடைத்துக் கொண்டு.

"வேலெடுத்து வா" என்பான் – விழி தருவாள். "ரத்தம் படிந்த வாள் எங்கே?" எனக் கேட்பான். செவ்விதழ் கொடுப்பாள். "அக்களமில்லை பெண்ணே, இக்களம்! இணை பிரியா எந்தன் துணையே! தலைவனவன் தயாராய் நின்றிருப்பான் எனை நோக்கி! வேல் தருவாய், விடை தருவாய். இடையில்லாப் பேரழகே!" என மடை

திறந்த காதல் வெள்ளம் விட்டு மறவனவன் நடக்கலுற்றான் மாவீரர் அணிவகுப்பின் பக்கம்.

வழியில் தாய் கண்டாள், வாழ்த்தினாள். 'வருக புலியே வெற்றியோடு' என்றாள். "தலைவனவன் உன் மீது சிறு கோபம் கொண்ட சேதி நானறிவேன், நீ மறைத்தால் தெரியாமல் போகுமா தம்பீ! தாயகத்தின் மேன்மைக்குத் தலை கொடுக்கச் செல்கின்ற படை வரிசை காத்திருக்கும், கடமை செய்து வா, என் கண்ணே" என்று முன்பவன் மார்பிலே பெற்றிருந்த புண்மீது முத்தமிட்டாள்.

போருக்குச் சென்ற வீரன் எதிரிகளைப் பொடி செய்து எலும்புப் புழுதியிலே சேர்த்துவிட்டான். இரத்தச் சகதியிலே இரு தரப்பு வீரர்களும் இறுதி யாத்திரைக்குச் சித்தமானார்கள். கடைசி வெற்றி பகைவருக்கு என்றொரு சேதி பறந்து வர, "கண்ணிருந்தும் குருடரா நாம்?" எனக் கேட்டபடி களத்தினிலே, நம் காளை சுழல்காற்றாய்ப் பறந்து சென்றான். தனியொருவன் – தலைவனவன் கண்ணெதிரே பகைப் படையின் பலமழித்தான், தோல்விப் புகைப்படலம் ஒழித்து நின்றான். வெற்றிக்கு வித்திட்டான். அம்மவோ! இறுதியில் மறைந்து வந்த அம்புக்கு இரையானான்!

வெற்றி கண்ட படைத் தலைவன், வீரன் சாய்ந்துவிட்ட காட்சி தனைக் கண்டு கதறிவிட்டான்..

சிறியோர் சேட்டை விளைத்த சிறு கசப்பால் கருத்தினிலே வேறுபாடு கொண்டிருந்த காவலனும், கலம்பட்டு வீழ்ந்திருந்த காளைதனைக் கண்ணீரால் குளிப்பாட்டுகிறான்.

சாகின்ற வீரன் சொல்வான்:

"தலைவா! தமைக் காத்த தலைவன் கண்களில் நீரைப் பெருக்குமாறு ஏற்படுகின்ற இதுபோன்ற களச்சாவுகளை வீரர்கள் யாசித்தாவது பெறுதல் வேண்டும்"

## கிருஷ்ணனையும் விடாத சாதீ

யாதவர்களுடைய கடவுளான கிருஷ்ணனைப் பற்றிக் கூட ஒரு கதை சொல்வார்கள். அவன் திறமை படைத்தவன், பெரிய ராஜதந்திரி என்றெல்லாம் புராணம் சொல்கின்றது. ஆனால் அவன் யாதவ வகுப்பைச் சேர்ந்தவன். ஆகவே க்ஷத்திரியர்கள்தான் நாட்டை ஆளலாம் என்று சொல்லி, அவனுக்கு ஆளும் உரிமை இல்லை என்று கூறிவிட்டார்கள்.

அதனால்தான் உத்தரப் பிரதேசத்தில் பிறந்த கிருஷ்ணன் இங்கே ராஜ்யத்தை அமைக்க முடியாமல், குஜராத்திற்குச் சென்று அங்கே 'துவாரகா' என்று புதிய ராஜ்யத்தை அமைத்தான். ஆக சாதி வித்தியாசம் கிருஷ்ணன் என்ற அவதாரத்தையும் விடவில்லை.

## புதிர்

"அம்மா பூவழகி! தானியங்களில் பதரை எளிதாகக் கண்டுபிடித்து ஒதுக்கிவிடுகிறாய். ஆனால் மக்களுக்கிடையிலும் பதர்கள் இருக் கிறார்களே, அவர்களை எப்படிக் கண்டு பிடிப்பது?"

பூவழகி மட்டுமல்ல – அவளுடன் சேர்ந்து வேலை பார்த்த எல்லாப் பெண்களுமே திகைத்து நின்றனர். அப்போது கார்மேகத்தின் மருமகன் கண்ணாயிரம் அங்கே வந்தான். அவனைக் கண்டதும் ஓரமாக ஒதுங்கிக் கொண்டனர்.

"என்ன, சிட்டுக் குருவிகள் என்ன சொல்கின்றனர்? எனது மாம னாருக்கு வாய்ப்பு என்றால் வாய்ப்புத்தான். எப்போதும் இளம் புறாக்கள் ஆடி – அடடா! இந்தக் களத்து மேட்டில் ஒரே களியாட்டம் தான்!"

கண்ணாயிரம் இப்படிச் சொன்னதும் கார்மேகம் வெகுண்டார்.

“ஏய், இப்படியெல்லாம் பேசாதே. எல்லோரும் நான் பெற்ற பெண்களைப் போல!”

கண்ணாயிரம் அதைக் கேட்டு உரக்கச் சிரித்தான்.

“என்ன மாமனாரே, உலகம் தெரியாமல் பேசுகிறீர்கள்! இவர்களில் நீங்கள் யாரைத் தொட்டாலும் துவளுவார்களே! என்ன கிள்ளைகளா; நான் சொல்வது சரிதானே?”

அது வரை பொறுமையாக நின்றிருந்த அந்த மகளிர் கூட்டத்திலிருந்து பூவழகி புயல் போலப் புறப்பட்டுக் கார்மேகத்தின் எதிர் வந்து நின்றாள்.

“அய்யா! மக்களில் பதர்களை எப்படிக் கண்டுபிடிப்பது என்று கேட்டீர்களே! அதற்கு அலையத் தேவையில்லை. இதோ இந்த உருவம்தான் மக்களில் பதர்” என்று சீற்றம் பொங்கச் சத்தமிட்டாள்.

## உயிருக்கு விலை ஐம்பது லட்சம்

மிஸ்டர் லஞ்சய்யா, ‘யார் அது?” என்று அதட்டுகிறார்

“நான் தான் எமதர்மன்”

“எருமை வாகனம் எங்கே?”

“அரசாங்க இலாகாக்களுக்கு இரவல் கொடுத்திருக்கிறேன்.”

“அவர்களது ஆமை வாகனம் என்ன ஆயிற்று?”

“அது ரிப்பேரில் இருக்கிறது”

“நத்தை வாகனம் கூடவா?”

“அதைத்தான் நகர சபைகளுக்கான நிர்வாகத்திற்கு அனுப்பி விட்டார்களே!”

"ஓகோ! இலாகாக்களுக்கு எருமையையும், நத்தையையும் வைத்துக் கொண்டு, தெருவில் மனிதர்கள் மீது மோத மட்டும் மான் வாகனம், முயல் வாகனங்களை வைத்திருக்கிறார்களா?"

"அது கிடக்கட்டும். வா போகலாம்"

"எங்கே?"

"இன்னுமா தெரியவில்லை? நீ செத்துவிட்டாய், யமலோகம் போகலாம் வா"

"யமலோகமா? அங்கே பஞ்சாயத்து யூனியன்,முனிசிபாலிடி, கார்ப்பரேஷன், சட்டசபை, மேல்சபை, பார்லிமெண்ட், ராஜ்ய சபா முதலியவை உண்டா? கட்சிகள் உண்டா? தேர்தல்கள் உண்டா?"

"ஒரு சனியனும் இல்லை. ஒரே அமைதியான உலகம்!"

'சே, சே. அமைதியான இடமே எனக்குப் பிடிக்காது. என் காரியம் நடக்க அமளி துமளி அதிகம் இருக்க வேண்டும்... உன்னுடன் வருவதற்கில்லை."

"மிஸ்டர் லஞ்சய்யா! நீங்கள் அப்படிச் சொல்லக் கூடாது. பிறகு நான் கடமையிலிருந்து தவறிவிட்டேன் என்ற களங்கம் வந்து சேரும்"

"ஓய் எமதர்மா! உமக்குக் களங்கம் வராமல் இருக்க ஒரே வழி என்ன தெரியுமா?.... நான் உன்னோடு வருவதாக இருந்தால் ஐந்து லட்சம் ரூபாய்க்கு இப்பொழுதே செக் தரவேண்டும்."

எமதர்மனுக்குத் தலை கிறுகிறுத்தது. "சாவதற்கும் லஞ்சமா?" என்று முணுமுணுக்கிறான்.

".... அடுத்த ஜென்மம் பிறப்பதாயிருந்தால் அதற்கும் கேட்பேன் தெரியுமா...."

"…. அடுத்த பிறவி எடுக்க வேண்டாம், அதற்கும் சேர்த்து இப்போதே கேட்டுவிடு, கொஞ்சம் 'கன்சஷன்' கொடு"

"...பத்து லட்சம் கொடுத்துவிடு"

"… இவனைக் காசாலேதான் சாக அடிக்க வேண்டும்" என்று ஒரு செக்கை எடுத்து எழுதுகிறான் எமன். அந்தச் செக்கை நீட்டி.

"இந்தா காசாலேசா! நீ காசாலே சா!"

மிஸ்டர் லஞ்சய்யா செக்கைப் பார்க்கிறார். "ஐம்பது லட்சம்"

"ஆ! ஐம்பது லட்சம்!" மிஸ்டர் லஞ்சய்யா வாயைப் பிளக்கிறார். பிறகு வாயை மூடவே இல்லை.

## கைதியின் கதை

சந்தானம் சொல்கிறான்:

குமுதம் என்னோடு படித்தவள். குபேரன் வீட்டுக் கோதை. நானோ குடியானவன் மகன். இறந்துபோன என் அப்பாவின் எண்ணத்தை எப்படியும் பூர்த்தி செய்ய எண்ணி, என் தாய் என்னைப் படிக்க வைத்தாள். படித்தேன். குமுதமும் நானும்; சரி கதையை வளர்த்துவானேன், காதலர்களாகிவிட்டோம். வலியோன் மகளை எளியோன் காதலித்தேன் என்பதைத் தவிர எங்கள் காதலில் வேறெந்தக் குற்றமும் யாரும் சொல்ல முடியாமல் தான் இருந்தது. வழக்கம் போல் எங்களின் திருமணத் திட்டம் முறியடிக்கப்பட்டது. வயதான என் தாயும் வாழ்க்கையை முடித்துக் கொண்டார்கள். குமுதமோ, ஒருநாள் இரவு என் குடிசைக்கு ஓடி வந்தாள். "கொத்தடிமை ஆகிவிட்டேன் உங்களுக்கு; குடும்பம் நடத்துவோம் வாருங்கள்" என அழைத்தாள். "எதிர்ப்பு மலையாகுமே குமுதம்?" என எச்சரித்தேன். ''மலையைப் பிளக்கும் சிற்றுளி நம் காதல்'' என்றாள் – மறுக்க முடியுமா என்னால்! அன்றிரவே பயணமானோம்.

அயலூரிலே எங்கள் குடும்பம் ஆரம்பமானது. ஆனந்தமானது. ஆனந்தமயமான அந்த வாழ்க்கையை நினைத்து இப்போது அழுவானேன்! எங்களுக்கு ஒரு செல்வமும் தோன்றினான்.

.... குழந்தையுடன் குதூகலமாய் நடைபோட்டோம் வாழ்வுப் பாதையில். குமுதாவின் அண்ணன்– மலேயா போயிருந்தான் சம்பாதிக்க – அவன் திரும்பி வந்துவிட்டான். வீட்டார் விஷயத்தைச் சொல்லியிருக்கிறார்கள் – அவன் ஒரு பர்மாக்காரியை பாரியாளாக அழைத்து வந்தவன். அவனுக்குக் குமுதா மீது கொள்ளை ஆத்திரம் பிறந்துவிட்டது. ஆகவே எதிர்க்கப் புறப்பட்டான். ஆள் முரடன். சண்டை போட்டுச் சமாளிப்பது கொஞ்சம் கஷ்டம்தான். குமுதாவை அடிமையாக்கினது என் அழகுதான் என்று யாரோ சொல்லி யிருக்கிறார்கள் அவனிடம் – ஏன், குமுதாவே அடிக்கடி அதைச் சொல்லிக் கொண்டிருப்பாள். அந்த அழகையே குலைத்து விடுகிறேன் என்று அவள் அண்ணன் அக்கினித் திராவகத்துடன் புறப்பட்டுவிட்டான், வீட்டிலே தூங்கிக் கொண்டிருந்தேன். அவன் வந்துவிட்டான் விழித்துக் கொண்டேன். திராவகத்தை என் அழகான முகத்திலே வீசி விட்டான். அய்யோ – அந்த எரிச்சலை இப்போது நினைத்தாலும் பயமாயிருக்கிறது.

பொறாமைக்காரர்களின் வயிற்றெரிச்சலையும் மிஞ்சக் கூடிய எரிச்சல் அது! திராவகம் ஊற்றப்பட்ட இடத்தைக் கையால் தொடாமல் இருப்பது கொஞ்சம் நல்லதாம் – அவசரத்தில் அந்த யோசனை யெல்லாமா வருகிறது? முகத்தைத் துடைத்துக் கொண்டேன் கையால். அப்போது கிழிந்ததுதான் இந்தச் சதையெல்லாம் – குமுதாவின் அண்ணன் ஓடினான். நான் துரத்திப் பிடித்தேன். முடியவில்லை – தெருவில் விழுந்துவிட்டேன்.

குமுதாவும் குழந்தையும் அப்போது வீட்டில் இல்லை. பையனைப் பள்ளிக்கூடத்தில் கொண்டுபோய் விடுவதற்காகப் போயிருந்தாள். உடனடியாக என்னை யாரோ தெருவிலுள்ளோர் வைத்திய

சாலையில் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். குமுதாவும் குழந்தை செல்வனும் வைத்தியசாலைக்கு ஓடி வந்து அலறினார்கள். குமுதா என் முகத்தின் கோரத்தைக் கண்டு அலறிவிட்டாள். முதலில் நான் சோகத்தின் உச்சத்தில் அலறுகிறாள் என்று தான் நினைத்தேன். பிறகுதான் ஊகித்துக் கொண்டேன். அவளுக்குத் தேவையான அழகு முகம் போய்விட்டதேயென அலறியிருக்கிறாள் என்று. மறுநாள் வைத்தியசாலையில் இருந்தபடியே கேள்விப்பட்டேன். குமுதா எங்கோ போய்விட்டாள் என்று. குழந்தை செல்வன் மாத்திரம் தெருவினரால் பராமரிக்கப்பட்டான்.

குமுதாவின் அண்ணன் மீது வழக்கு நடைபெற்றது. நானும் சிகிச்சை பெற்று இந்த அலங்கோலமான முகத்துடன் வெளியே வந்தேன். ஐந்து வருடத்திற்குக் கிட்டத்தட்ட வழக்கு நடைபெற்று கடைசியில் குமுதாவின் அண்ணன் விடுதலை பெற்றான். அவன் குற்றவாளியல்ல என்று தீர்ப்புக் கூறப்பட்டுவிட்டது.

என்னால் தாங்கமுடியவில்லை. பொறுக்க முடியாத ஆத்திரத்தில் துடித்தேன். அவசரப்பட்டு ஏதேனும் செய்துவிட்டால், குழந்தை செல்வன் நாதியற்றுப் போய்விடுவானேயென்று யோசித்தேன். கடைசியாக சிலரது சிபாரிசு பிடித்து செல்வனை வெளியூரிலே ஒரு பள்ளிக்கூட தர்ம உணவு விடுதியில் சேர்த்துவிட்டு ஒரு பெருமூச்சை விட்டேன்.

அந்தப் பெருமூச்சைத் தொடர்ந்து குமுதாவின் அண்ணனைப் பழிவாங்கும் மூச்சும் பிறந்தது. குமுதா என் விகார ரூபத்தைச் சகிக்காமல் எங்கோ போய்விட்டாள். குமுதா என் இருதயத்தைக் காதலிக்கவில்லை. அழகைத் தான் காதலித்தாள் என்ற பேருண் மையை அவள் அண்ணன் வீசிய அக்கினித் திராவகம் எனக்கு உணர்த்தியது என்றாலும் கூட, போகும் பாதை மோசம் என்பதை எச்சரிக்கும் தோரணையில் முள் குத்துகிறது என்பதற்காக அந்த முள்ளை எடுத்து முத்தமிட முடியுமா? அதை ஒடித்து முறித்து

தூரத்தில் வீசித்தானே எறிகிறோம்! அதுபோலவே என் முகத்தைப் பாழ்படுத்திக் காதல் பாதை மோசம் என்று உணர்த்திய மூர்க்கனை விட்டு வைக்க மனமில்லை.

என் அருமைச் செல்வனுக்கு அறிவுரைகள் பகன்றேன். "எந்தத் தவறு வேண்டுமானாலும் செய். ஒரு பெண்ணை மட்டும் காதலிக்காதே" என்பதை அவனுக்கு ஆயிரம் முறை சொல்லிவிட்டு கையில் கத்தியுடன் புறப்பட்டேன். குமுதாவின் அண்ணன், அந்த பர்மாக்காரி, அவர்களின் பெண் குழந்தை மூவரும் முற்றத்தின் பக்கம் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். யாரையும் கேட்காமல் உள்ளே நுழைந்தேன். வீட்டிலும் அவர்களைத் தவிர வேறு யாருமில்லை. குமுதாவின் தகப்பன் இரண்டு வருடங்களுக்கு முன் இறந்துவிட்டான். பர்மாக்காரிக்கும் க்ஷயரோகம் வந்து மிகவும் கஷ்டப்படுகிறாள் என்று கேள்விப்பட்டிருந்தேன்.

இந்தச் சோக நிகழ்ச்சிகளெல்லாம் குமுதாவின் அண்ணனைத் தாக்கி வேதனை கொடுத்திருந்தாலும்கூட, நான் நேரிடையாக வஞ்சம் தீர்த்துக் கொள்ளவே மிகவும் துடித்தேன். அவர்கள் பக்கம் வேகமாக வந்தேன். பர்மாக்காரி பலமாக இருமிக் கொண்டிருந்தாள். கையிலிருந்த கத்தியை குமுதாவின் சகோதரனுடைய நெஞ்சில், – ஆம், என்னை அலங்கோலப்படுத்திய அந்தப் பாவியினுடைய இருதயத்துக்கு நேராகச் செலுத்தினேன் – மாறி மாறிக் குத்தினேன் – அங்கேயே பிணமானான். அதனுடைய விளைவுதான். இத்தனை ஆண்டு சிறைவாசம். அவன் என்னைக் கொல்லாமல் கொன்று விடுதலை பெற்றான். அவனை ஒரேயடியாகக் கொன்று தண்டனை பெற்றேன்.

## கிழவரின் மனைவி

சிவனின் தலையிலே ஒரு ஜடை சற்று வேகமாக அசைந்தது. அசைவைத் தொடர்ந்து கங்கா நடந்து கொண்டிருந்தாள்.

பூனையைப் போன்ற பஞ்சுப் பாதங்களைச் சிவனின் தலையில் வெகு லாவகமாக வைத்துச் சுற்று முற்றும் பார்த்தபடி எங்கேயோ போய்க் கொண்டிருந்தாள்.

ஒரு ஜடையின் அடியில் போய் நின்று கொண்டு, தங்கக் கரங்களைக் கிளைகளில் நீட்டியபடி யாரையோ எதிர்பார்த் திருந்தாள். அவள் நீலக் கருவிழிகளைக் கிளைகளின் நடுவே நீண்ட இரண்டு கரங்கள் பொத்தின.

கங்கையின் கைகள் அவளையறியாமல் அந்தக் கைகளைப் பிடித்துக் கொண்டன. அல்லித் தண்டில் ரோஜா மலரைப் பொருத்தி வைத்தது போலிருந்தது அந்தக் கை கலப்பு, "சந்திரா!" தேனுண்ட மயக்கத்தில் களைப்புற்ற வண்டின் கீழ்ஸ்தாயி ரீங்காரம் போலிருந்தது அந்த அழைப்பு.

சந்திரா... ஆம். சந்திரன் தான். சிவனாரின் தலையில் குடியிருக்கும் அந்த வாலிபன்தான், பஞ்சோடு நெருப்பை வைத்திடலாகாது என்பார்கள். முருகனின் மயிலோடு பாம்பை வைத்திருப்பவர்தானே பரமேஸ்வரன். கங்கையைத் தலையில் கொண்டவர், சந்திரனைக் காலிலாவது வைத்திருக்கலாம். என்னவோ 'பாவம்' அவர் தலை எழுத்து.

"கங்கா கண்ணே!"

"சந்திரா சல்லாப ரூபா!"

"அன்பே... நேற்று ஏனடி வரவில்லை?"

"நேற்று என் முறை. இன்று பார்வதி முறை"

"மெதுவாகப் பேசு... சிவன் விழித்துவிடப் போகிறார்"

"நல்ல வேளை, தலையில் கண்ணில்லை. விழித்தாலும் பய மில்லை"

"நீ கிண்டல்காரி கங்கா!"

"நீ மட்டும் என்னவாம்!"

"கங்கா... உனக்கு அந்தக் கிழவனோடு பேசப் பிடிக்கிறதா?"

"பிடித்திருந்தால்... சந்திரனை ஏன் தேடுகிறேன்?"

"தாரை பேசுகிற மெட்டில் பேசுகிறாயே... அவளும் இப்படித்தான். அவள் புருஷன் தாடியும் மீசையுமாய்த் தள்ளாத காலத்தில் அவளைக் கஷ்டப்படுத்துகிறானாம்"

"எங்களைப் போலத் தாரையும், கங்கையும் தள்ளாத கிழவன்களுக்கு வந்து சேர்ந்தால் உன்னைப் போலச் சந்திரர்களுக்கு வேட்டைதான்"

முற்றும்

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் ஆய்வக நூல் நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்